# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 09 திங்கட்கிழமை (23.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :178


## படையினரின் வெசாக் நிகழ்வு யாழ்.நகரில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்.மே23

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள முப்படையினரும் பொலீஸாரும் இணைந்து இன்று முதல் மூன்று தினங்களுக்கு வெசாக் கொண்டாட்டத்தை யாழ்.நகரில் நடத்த உள்ளனர். யாழ்.பொது விளையாட்டரங்கில் இன்றும் நாளையும் நாளைமறுதினமும் இந்த வெசாக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. பலாலி பாதுகாப்புத் தலைமையகமும் 51ஆவது படைப்பிரிவும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. இதில் வெசாக்கூடுகளின் கண்காட்சி, இராணுவ இசைக் குழுவினரின் இசைநிகழச்சி என்பன் இடம்பெறவுள்ளன.

முன்னைய வருடங்களில் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் முகாம்களிலேயே வெசாக் கொண்டாட்டத்தை நடத்தி வந்தனர். இம்முறை முதற்தடவையாக யாழ்.பொதுவிளையாட்டரங்கில் இதனைக் கொண்டாடுவதற்கு அவர்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குடாநாட்டில் படையினர் நடத்தும்

## வெசாக் நிகழ்வில் தமிழர் பங்கேற்பது அரசுக்குத் துணைபோவதாக அமையும்

### அதனைப் புறக்கணிக்க பொது அமைப்புகள் வேண்டுகோள்

படையினர் நடத்தும் வெசாக் கொண்டாட்டத்தில் தமிழ் மக்கள் கலந்துகொள்வது தமிழர்கள் அரசுடனும் படையினருடனும் நெருக்கமாக உள்ளனர் என்ற தோற்றத்தை உலக அரங்கில் ஏற்படுத்தும் அரசின் முயற்சிகளுக்கு துணை செய்வதாகவே அமையும். அதற்குத் தமிழ் உறவுகள் துணை போகவேண்டாம்.

- இவ்வாறு குடாநாட்டு மக்களுக்கு பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இது தொடர்பாகத் தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாண விளையாட்டரங்கில் வெசாக் பண்டிகையைக் கொண்டாட படையினர் ஒழுங்குகள் செய்துள்ளனர். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது சாந்த சொரூபியான புத்தபெருமான் பரிநிர்வாணம் பெற்ற நாளை சமூக, சமய பேதங்களைக் கடந்து எந்த வேறுபாடுமற்று சகோதர ஐக்கியத்துடன் யாழ்ப்பாணத்தில் அரச படையினர் கொண்டாடுகின்றனர் என்ற ஒரு தோற்றத்தை இது ஏற்படுத்தும்.

நேற்றுவரை கொன்றதும், (12ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று உயர் மட்டப் பாதுகாப்பு மாநாட்டில்

# திருகோணமலை நிலைமை குறித்து ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு

## ஓரிரு நாள்களில் சுமுகத் தீர்வு பொலீஸ்மா அதிபர் நம்பிக்கை

திருகோணமலை,மே23

**இனப்பதற்றத்துக்கு உள்ளாகியிருக்கும் திருகோணமலை நிலைமை குறித்து ஜனாதிபதி தலைமையில் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் ஆராயப்பட்டிருக்கின்றது. முக்கிய முடிவுகள் சிலவும் எடுக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரியவருகின்றது.**

**இந்த மாநாட்டில் பங்குகொண்ட பின்னர் கருத்து வெளியிட்ட பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ திருகோணமலைப் பிரச்சினைக்கு அடுத்த ஓரிரு நாள்களில் சுமுகத் தீர்வு காணப்படும் என நம்பிக்கை வெளியிட்டார்.**

திருகோணமலை மாவட்டத்தின் நிலைமைகள் குறித்தும், கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புக் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுப் பிற்பகல் முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ்மா அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் முக்கிய பேச்சுக்களை நடத்தினர்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கோட்டே கொட, கூட்டுப் படைகளின் தளபதியும் கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜயவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த ஒரு வாரகாலமாகப் பதற்றத்திற்கு உள்ளாகியிருந்த திருமலை மாவட்டத்திற்கான தமது விஜயம் மற்றும் அங்கு நடத்திய பேச்சுகள் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பின் போது

(12ஆம் பக்கம் பார்க்க)

## செம்பியன்செல்வனுக்கு 'நாட்டுப்பற்றாளர்' விருது



மறைந்த எழுத்தாளர் செம்பியன்செல்வனுக்கு 'நாட்டுப்பற்றாளர்' விருது வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத்தின் புகழ்பூத்த சிறுகதை நாவலாசிரியரான செம்பியன்செல்வன் என்று அழைக்கப்படும் அமரர் ஆறுமுகம் ராஜகோபால் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் 'நாட்டுப்பற்றாளர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். செம்பியன் செல்வன் தனது எழுத்தாலும் செயலாலும் இதுகாலவரை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆற்றிவந்த பணிகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவே நாட்டுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் மற்றொரு புத்தர் சிலை அமைக்கும் முயற்சி முறியடிப்பு!

திருகோணமலை.மே23

ஆங்காங்கே புத்தர் சிலைகள் திடீர் திடீரென முளைப்பதால் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் திருகோணமலை நகரப்பகுதியில் மற்றொரு புத்தர் சிலையை திடீரென வீதி ஓரத்தில் ஸ்தாபிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பொலீஸாரால் முறியடிக்கப்பட்டதெனத் தெரியவருகின்றது.

திருகோணமலை பஸ்நிலையப் பகுதியில் திடீரென முளைத்த புத்தர் சிலை விவகாரம் சூடுபிடித்திருக்க, நேற்று என்.ஸி.வீதியில் (ஏகாம்பரம் வீதியில்). திருகோணமலை மயானம் மற்றும் ஜமாலியா ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட திருக்கடலூர் பிரதேசத்தில் உள்ள விஜிதபுர என்ற இடத்தில் வீதியோரத்தில் புத்தர் சிலை ஸ்தாபிக்க முயற்சி எடுக்கப்பட்டது.

புத்தர் சிலையை நிறுவுவதற்கான பீடம் கட்டப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கிடைத்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்று வழமைநிலை!

திருகோணமலை.மே23

திருகோணமலை நகர மத்தியில் பஸ் நிலையத்துக்கு அருகில் ஓட்டோ தரிப்பிடப் பகுதியில் திடீரென முளைத்த புத்தர் சிலையால் அங்கு ஏற்பட்ட பதற்ற நிலைமை நேற்றுத் தணிந்திருந்தது.

இந்தப் புத்தர் சிலை அமைப்பை ஆட்சேபித்து திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவையால் விடுக்கப்பட்ட ஹர்த்தால் அழைப்பினால் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் முடங்கியிருந்த திருகோணமலை நகரம், ஹர்த்தாலை நேற்றுமுதல் மூன்று நாள்களுக்கு மக்கள் பேரவை இடைநிறுத்தியதால் நேற்று வழமைக்குத் திரும்பியது.

வெசாக் பண்டிகையை ஒட்டித் தனது ஹர்த்தால் நடவடிக்கையை மக்கள் பேரவை நாளை வரை மூன்று தினங்களுக்கு இடைநிறுத்தியிருப்பது தெரிந்ததே. இதனால், நாளை வரை இயல்புநிலைமை நீடிக்கும் என நம்பப்படுகின்றது. ஹர்த்தால் நீக்கப்பட்டதால் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்றபோதிலும் வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன.

ஐந்து நாள்களாக வீடுகளுக்குள் முடங்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாடு மற்றும் பளை, பூநகரி பகுதிகளில்

## நீர்ப்பாசனம் மற்றும் குடிதண்ணீருக்கு பாரிய திட்டம் விரைவில் நடைமுறை

யாழ்ப்பாணம்,மே23

குடாநாட்டு மற்றும் பளை, பூநகரி ஆகிய பிரதேச மக்களின் குடிதண்ணீர் பாவனைக்கும் விவசாயத் தேவைக்குமான நீரைப் பெற்றுக்கொள்வதற்கான பாரிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னோடியாக ஆஸ்திரேலிய மற்றும் உள்ளூர் நிபுணர்கள் குழு ஒன்று ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது.

குடாநாட்டு நீர் உவர்நீராக மாறுவதாலும், மாசடைவதாலும் சுத்தமான நீரைப் பெறமுடியாத நிலை உருவாகிவருவதாக நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

இந்நிலையில், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை எடுத்த நடவடிக்கைகளின் பயனாகச் சுத்தமான குடிதண்ணீரை வழங்க புதிய திட்டம் ஒன்றைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் கடந்த மாதம் 24ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் அதிகார சபையினர் பொது முகாமையாளர் விக்கிரமகே, வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர், யாழ். அரச அதிபர், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன் ஜூனில் இலங்கை வருகிறார்

கொழும்பு.மே23

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்துவதற்கும் -

அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கான சாத்தியங்களை ஆராய்வதற்குமாக - நோர்வே அனுசரணைக் குழுவின் சார்பில் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வரவிருக்கின்றார் எனத் தெரிகிறது.

இம்மாத நடுப்பகுதியில் அவர் இலங்கை வருவார் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாகாண ஊழியருக்கு விசேட ஏற்பாட்டில் சம்பளத்தை வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே23

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாண சபையின் கீழுள்ள திணைக் களங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக் கான மே மாத சம்பளத்தை மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பன முற்பணமாக - வங்கிக் கட்டளைகளாக வழங்க முன்வரவேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதனால், மேல்மாகாண சபையின் கீழுள்ள திணைக்களங்கள் - அமைச்சுகளின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான கட்டுநிதி அனுப்புவதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் மாகாண சபைக்குட்பட்ட ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படவில்லை.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் நலன் கருதி வங்கிகள் விசேட ஏற்பாட்டின் மூலம் சம்பளத்தை வழங்க முன்வரவேண்டும் என்று சிவாஜிலிங்கம் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-204)

## உயிரியல் பாடக் கருத்தரங்கு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மீட்டல் கருத்தரங்கு நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு விசாகக் கல்லூரி நடத்தவுள்ள இக் கருத்தரங்கில் அனைத்து மாணவர்களையும் கலந்துகொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

## திருமலையில் தீவிர பாதுகாப்பு

திருகோணமலை,மே23

கடந்த சில தினங்களாக பதற்றத்திற்குள்ளாகியிருந்த திருகோணமலையில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

திருமலை நகரின் முக்கியமான அனைத்து இடங்களிலும் இராணுவத்தினரும் பொலீஸாரும் ஆயுதங்களுடன் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அதேபோல் கடலிலும் கடற்படையினரின் ரோந்துப் பீரங்கிப் படகுகள் எதற்கும் தயார்நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வழமையை விட பொலீஸாரும் இராணுவத்தினரும் கூடுதலான ரோந்துச் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர் என மேலும் கூறப்படுகிறது.

தொடர்ச்சியான பதற்ற நிலைமை இருந்த காரணத்தினால் வெளியிடங்களிலிருந்து பொலீஸாரும் இராணுவத்தினரும் திருமலைக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே23

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரை இறுதியாட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணியும் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணியும் மோதுகின்றன. (ஒ-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே23

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், ஈ.எஸ். பேரம்பலம் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. அணியும் யங்ஸ்ரார் வி.க. அணியும் மோதுகின்றன. (3)

# ஜனாதிபதித் தேர்தலுக்குத் தம்மை தயார் செய்கிறார் பிரதமர் மஹிந்த

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் அந்தக் கட்சி உத்தியோகபூர்வமான தீர்மானமொன்றை எடுக்காத தற்போதைய சூழ்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தம்மைத் தயார் படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்.

விரைவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் இது தொடர்பாகக் கடந்த வாரம் அலரிமாளிகையில் முக்கிய பிரமுகர்கள் பலரைப் பிரதமர் மஹிந்த சந்தித்துப் பேசியிருக்கிருக்கிறார்.

சிங்கள சினிமாத்துறையின் பிரபலம்வாய்ந்தவர்கள் உட்பட அனைத்துத் தரப்பிலும் உள்ள கலைஞர்கள் பலரைக் கடந்த வாரம் அலரி மாளிகைக்கு அழைத்து முக்கியமான கலந்துரையாடலொன்றை பிரதமர் நடத்தியிருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சி சார்பான கலைஞர்கள் பலரும் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

அதேபோல், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரபல அமைச்சரும், சிரேஷ்ட அரசியல்வாதியுமான சிறிசேன குரேயையும் அழைத்து முக்கியமான கலந்துரையாடலை நடத்தியிருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இந்தச் சந்திப்புக்களின்போது அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் இதில் தாம் போட்டியிடவுள்ளமை குறித்தும் பிரதமர் கருத்துப் பரிமாற்றம் செய்துள்ளார் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாட்டு நிலைமையொன்று இருப்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்கவும் அடுத்த ஜனாதிபதிப் பதவிக்கு இலக்கு வைத்திருக்கிறார் என்பது தெரிந்ததே.

இதேவேளை, ஆட்சி அதிகாரத்தில் தாமே தொடர்வதற்கான வழிமுறை குறித்துத் தற்போதைய ஜனாதிபதியும் கட்சித் தலைவியுமான சந்திரிகா ஆராய்ந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 40 ஓட்டங்களால் மே.இ.தீவுகளை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது பாகிஸ்தான் அணி

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் செ.லூசியாவில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் 40 ஓட்டங்களால் வெற்றியடைந்தது. இதன்படி 3 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரை 2:0 என்ற முன்னிலையில் பாகிஸ்தான் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் வீரர்களின் துடுப்பாட்டம் சிறப்பாகவே இருந்தது. பந்துவீச்சுக்கு சாதகமான களத்தில் வீரர்கள் சிறப்பாக ஓட்டங்களைக் குவித்தனர்.

அப்ரிடியின் ஆட்டம் இந்த ஆட்டத்திலும் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாகவே இருந்தது. அணியின் நடுவரிசை வீரர்கள் அனைவரும் சராசரியான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர்.

பாகிஸ்தான் அணி சார்பாக மலிக் 51 ஓட்டங்களையும் இன்ஸமாம் 51 ஓட்டங்களையும் யூனுஸ்கான் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய அணி சார்பாக கொலிமோர் 3 விக்கெட்டுக்களையும் பவல் ஹின்ட்ஸ், கைல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப் பற்றினர்.

வெற்றி இலக்காக 259 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலளித்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.



எனவே, இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 40 ஓட்டங்களால் வெற்றியடைந்தது.

இந்த ஆட்டத்திலும் மேற்கிந்திய வீரர்களின் துடுப்பாட்டம் பெரியளவில் இருக்கவில்லை. தொடர்ந்து அணியின் தோல்விகளால் ரசிகர்களும் கடும் விரக்திக்குள்ளாகியுள் ளனர். அணி சார்பாக மோர்டன் 55 ஓட்டங்களையும் கைல் 43 ஓட்டங்களையும் பிரவுனி 35 ஓட் டங்களை யும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக அப்ரிடி 4 விக்கெட்டுக்களையும் நவீட் 2 விக்கெட்டுக்களையும் ஷபீர், இப்திகார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

சிறப்பாக ஆடி அரைச்சதமடித்த சொயிப் மலிக் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (க-3)

# ஆப்கான் சிறை துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட அமெ. படையினர் தண்டிக்கப்படவேண்டும்

## ஆப்கான் ஜனாதிபதி கோரிக்கை

காபூல்,மே23

ஆப்கானிஸ்தான் பக்ரம் வான்படைத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளை அமெரிக்கப் படையினர் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கினர் என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து படையினரைத் தண்டிக்கவேண்டும் என்று ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க புலன் விசாரணையொன்றில் வெளியான இந்தக் குற்றச்சாட்டுக்களை 'சண்டே ரைம்ஸ்' சஞ்சிகை வெளியிட்டதைத் தொடர்ந்தே ஆப்கான் ஜனாதிபதி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் அவர் இதனைத் தெரிவித்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் 24 மணிநேரத்திற்குள் ஒரு கைதி 100 தடவைகள் அமெரிக்கப் படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகி இறந்தார் என்று அந்தச் சஞ்சிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கான் கைதிகளை மோசமாக நடத்திய அமெரிக்கப் படையினரைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவது குறித்த தெளிவான நடவடிக்கை தேவை என்றும் -

எதிர்வரும் வாரம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை சந்திக்கும் போது இது குறித்து நிச்சயமாகப் பேசுவார் என்றும் ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சிறை துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட 7 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என அமெரிக்க அரசதுறைச் செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ-க)

உலக அரங்கில்

# லெபனானில் கடும் மோதல்!

லண்டன்,மே23

இஸ்ரேலிய படையினருக்கும் லெபனான் ஹிஸ்புல்லா படையினருக்கும் இடையில் கடும்மோதல் ஏற்பட்டது. இருதரப்பினருக்கும் இடையில் குண்டுவீச்சுகள் இடம்பெற்றன என அந்நாட்டு செய்திகள் தெரிவித்தன.

சர்ச்சைக்குரிய ஷபா தோட்டப் பகுதியில் இம்மாதம் இரண்டாவது தடவையாக இந்த மோதல் ஏற்பட்டதென அதிகாரிகள் தெரிவித்தனர்.

லெபனான் பகுதியைச் சேர்ந்த இடையர் ஒருவர் தங்கள் பகுதிக்குள் வருவதை தடுப்பதற்காக வானத்தை நோக்கிச் சுட்டனர் என்றும் -

அதன் பிறகு ஹிஸ்புல்லா படையினர் தம் மீது ஷெல் தாக்குதல் நடத்தியதன் காரணமாக தாமும் ஷெல் தாக்குதல் நடத்தினர் என்றும் -

இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

தெற்கு லெபனானில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைகொண்டிருந்த இஸ்ரேலிய படையினர் 5 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறினர் என்றாலும் ஷபா தோட்டப்பகுதி இன்னும் சர்ச்சைக்குரியதாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# இரகசிய அறையில் சிறைவைக்கப்பட்ட சதாமின் புகைப்படம் லண்டன் பத்திரிகையில்

லண்டன்.மே 23

அமெரிக்காவில் இரகசிய அறையில் சிறை வைக்கப்பட்டுள்ள ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மற்றும் அவரது சகாக்கள் இருவர் சிறையில் இருப்பது போன்ற படங்களை பிரிட்டனைத் தளமாகக் கொண்டு வெளிவரும் 'சன்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. இது சர்வதேச சமூகம் மத்தியில் பெரும் பரபரப் பை ஏற்படுத்தியுள்ளது.

இரகசிய அறையில் பாதுகாப்பாக வைத்திருப்பவர்களை யார் புகைப்படமெடுத்து அனுப்பினார்கள் என்பது குறித்து அமெரிக்க இராணுவம் மத்தியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சதாம் ஹுசைன் உள்ளாடையுடன்துணி துவைப்பது போன்ற படத்தை 'சன்' பத்திரிகை ஒருசில தினங்களுக்கு முன்னர்வெளியிட்டது. இந்தப்புகைப்படங்களை 'சன்' பத்திரிகைக்கு அனுப்பியவர்களைக் கண்டுபிடித்து கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று அமெரிக்க உயரதிகாரிகள் எச்சரித்திருந்தனர்.

ஆனால், அந்த எச்சரிக்கைக்கு அஞ்சாத 'சன்' பத்திரிகை நேற்றுமுன்தினம் மேலும் 3 புகைப்படங்களை பிரசுரித்திருந்தது.




ஒரு புகைப்படத்தில் சதாம் ஹுசைன் முள் வேலிக்கு அருகில் உள்ளங்கைகளை விரித்து தலை கவிழ்த்துக் கொண்டிருப்பது போலவும்

ஏனைய இரு படங்களில் சதாமின் நெருங்கிய உறவினரும் கொடூர மனிதருமான 'கெமிக்கல் அலி'யும் பயங்கர உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்க சதாமிற்கு உதவியாக இருந்த பெண் விஞ்ஞானி ஹுடாசெலி மெதி எம்மாஸ் (மிசஸ் அந்திராக்ஸ்) ஆகியோர் முள் வேலிக்கு அப்பால் இருப்பது போன்றும் அந்தப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

போர்க்கைதிகளை நடத்த வேண்டிய ஜெனீவா விதிமுறைகளை மீறி சதாம் ஹுசைன் சிறையில் நடத்தப்படுகிறார் என தற்போது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

'சன்' பத்திரிகையில் சதாம் ஹுசைன் உள்ளாடையுடன் இருப்பது போன்று வெளியிடப்பட்டுள்ள புகைப்படம் மனித உரிமையை மீறும் செயல். இதற்காக 4 கோடி ரூபா (இந்திய நாணயப்படி) நஷ்டஈடு வழங்குமாறு நீதி மன்றில் வழக்குத் தொடர்வேன் என சதாமின் வழக்கறிஞர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ-க)

# கடாபியின் மகன் அதிபராகமாட்டார்

அம்மான்.மே23

தந்தைக்குப் பிறகு ஜனாதிபதியாகும் எண்ணம் தனக்கு இல்லையென லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபியின் மகன் அல் - இஸ்லாம் கடாபி தெரிவித்துள்ளார்.

உலக பொருளாதார மையம் சார்பில் ஜோர்தானில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 1980ஆம் ஆண்டு லிபியா தாக்கப்பட்டது. அதன் பிறகு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் ஜனாதிபதி கடாபி மோதல் போக்கை கையாள ஆரம்பித்தார்.

அவரது மகன் திரைமறைவாக செயற்பட்டு கடாபியை சமாதானப்படுத்தி அந்நாடுகளுடன் மீண்டும் உறவைப் புதுப்பிக்க வழிவகுத்தார். இழப்பீடுகளையும் பெற்றுத்தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கொள்கைப் பற்றுக்கு இது ஒரு சோதனை

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சதி அரசியல் செய்கிறார் என விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

'விரைவில் பொதுக்கட்டமைப்பு வந்துவிடும் என்று சந்திரிகா அம்மையார் விடுக்கும் அறிவிப்புகள் உண்மைத்தன்மை கொண்டவை அல்ல. உலகப் பெரும் நிதியைப் பெற்றுவிடத் துடிக்கும் ஏமாற்று நோக்கம் கொண்டவையாகவே அவற்றைப் புலிகள் இயக்கம் கருதுகின்றது. உலக சமூகத்தை ஏமாற்ற வாயளவில் பொதுக்கட்டமைப்பை ஏற்றுக் கொண்டதாகக் கூறிவிட்டு அதை நடைமுறைப்படுத்தாதுவிடும் வழமையான சதி அரசியலைச் செய்யவே சிங்கள அரசு முயலுகின்றது'- இப்படிப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தப் பத்தியில் ஏற்கனவே நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டிய அம்சங்களே இப்போது விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான விடுதலைப் புலிகள்' சஞ்சிகையில் 'புலிகளின் குரல்' என்ற ஆசிரிய தலையங்கப் பகுதியில் மேற்படி குற்றச்சாட்டாக வெளிவந்திருக்கின்றன.

'பொதுக்கட்டமைப்பு ஒன்று உடனடியாகவே உருவாக்கப்பட வேண்டும் என்பதில் புலிகள் இயக்கம் உறுதியாகவேயுள்ளது. அதன் அடிப்படையிலேயே நோர்வே சமர்ப்பித்த பொதுக்கட்டமைப்பு மாதிரி வரைவில் பல குறைபாடுகள் இருந்தும் அதை நடைமுறைப்படுத்தப் புலிகள் இயக்கம் உடனடியாகவே சம்மதித்தது என்றும் அந்த ஆசிரிய தலையங்கத்தில் புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் மக்களுக்கு ஏற்பட்ட பேரவலம் கருதி அரசியலுக்கு அப்பால் விடயங்களை அனுகி செயற்படுவதற்குப் புலிகள் தீர்மானித்தபடியால்தான் இந்த விட்டுக்கொடுப்பு.

ஆனால், இது ஜனாதிபதி சந்திரிகாவோ அவரது அரசோ எதிர்பார்க்காத முடிவு. தமது மக்களின் நலன்கருதி புலிகள் எடுத்த இந்தத் தீர்மானம் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் அதிர்ச்சியைத் தந்தது என்பது உண்மைதான்.

பொதுக்கட்டமைப்புக்குப் புலிகள் இணங்கி விட்டார்கள் என்பதால் தாமும் அதற்கு இணங்கித்தானாக வேண்டும் என்ற கட்டாயநிலை ஜனாதிபதிக்கு இல்லையேல் சர்வதேச சமூகத்தின் எதிர்ப்புக்கும் காழ்ப்புணர்வுக்கும் விரோதத்துக்கும் தாமும் தமது அரசும் இலக்காக வேண்டிவரும் என்பதும் அவருக்கு நன்கு தெரியும்.

அதேவேளை, தாம் ஆட்சியமைப்பதற்காகத் தமது அரசுக் கூட்டமைப்பில் பங்காளிகளாகத் தாம் சேர்த்துக்கொண்டுள்ள பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்குடைய பேரினவாதிகள், தமிழருக்கும் நியாயம் செய்யும் இந்தப் பொதுக்கட்டமைப்புக்கு இணங்கவேமாட்டார்கள் என்ற இக்கட்டும் ஜனாதிபதிக்கு.

இந்த இக்கட்டிலிருந்து மீள்வதற்குப் புதிய உத்தியை தந்திரோபாயத்தை அவர் நாடுகின்றார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டிலிருந்து தாமாகவே புலிகளை விலகவைப்பதன் மூலம் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டிய அழுத்தத்திலிருந்து தன்னையும் தனது அரசையும் விடுவித்துக்கொள்ள திட்டமிடுகின்றார் ஜனாதிபதி.

புலிகளின் அடிப்படைக் கொள்கை இலட்சியங்களே தகர்க்கக்கூடிய அம்சங்களைப் பொதுக்கட்டமைப்புடன் இணைக்க வைப்பதன் மூலம் பொதுக் கட்டமைப்புத் திட்டத்திலிருந்து புலிகளை விலக வைக்கவும் அவர் திட்டமிடுகின்றார்.

★ பொதுக்கட்டமைப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் இலங்கையினதும் அரசினதும் இறையாண்மையைப் புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

★ விடுதலைப் புலிகளின் செல்வாக்கும், பிரதிநிதித்துவமும் கொண்ட பொதுக்கட்டமைப்பு அரசின் அமைச்சு ஒன்றின் கீழும், அதன் மூலம் நாடாளுமன்றத்தின் கீழும் செயற்படும். இதனால், பொதுக் கட்டமைப்பு நாடாளுமன்றத்துக்குப் பதில் கூற வேண்டிய அமைப்பாகவே இருக்கும்.

- இந்தச் சாரப்பட ஜனாதிபதியிடமிருந்தும், அவரது அரசின் சமாதான செயலகத்திடமிருந்தும் வெளிவரும் கருத்துகள், பொதுக்கட்டமைப்பிலிருந்து புலிகளை அவர்களாகவே விலகிச் செல்ல வைக்கும் தந்திரமாகும்.

'பொதுக்கட்டமைப்பு வெறும் பரிந்துரை - சிபாரிசு - செய்யும் ஓர் ஆலோசனைச் சபை மட்டுமே என்று கூறும் ஜனாதிபதி, அது ஓர் அமைச்சின் கீழ் அமைச்சுக்குக் கட்டுப்பட்டு செயற்படும் என்று அடித்துக் கூறுவது இந்த உள்நோக்கத்தில்தான்.

தமது கொள்கை, இலட்சியம், நோக்குப் போன்றவற்றில் புலிகளின் பற்றுறுதி, விடாப்பிடித் தன்மை. உயிர்போனாலும் அவற்றைப் பேணும் பிடிவாதம் போன்றவை உலகறிந்த விடயம். அதை வைத்து இது விடயத்தில் விளையாடப் பார்க்கிறது தென்னிலங்கை அரசு.

கொள்கைப் பற்றுத் தொடர்பான சோதனைகள் அனைத்திலும் வென்று வந்த புலிகளின் தலைமைக்கு இது மற்றொரு சோதனை.'அவ்வளவே.

# பொதுக்கட்டமைப்பு உருவாகாததால் வீடுகள் அமைக்கும் பணிகள் தாமதம்

## யாழ்.செயலக அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே23

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதியில் நிரந்தர வீடுகளை அமைக்க உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன. எனினும், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாததால் வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

- இவ்வாறு யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் 5 ஆயிரத்து 428 வீடுகள் முற்றாகவும் பகுதியாகவும் சேதமடைந்திருந்தன. இந்த வீடுகளை மீள நிரந்தரமாக அமைக்க இடம்தெரிவு செய்யப்பட்டு, அந்த இடங்களில் வீடுகளை அமைக்க சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையில் உடன்பாடுகளும் கைச்சாத்திடப்பட்டிருந்தன. ஆனால், இன்னமும் எந்த வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதுகுறித்து செயலக அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது -

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடமைக்கும் திட்டம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு தொடர்பாக இறுதிமுடிவு இன்னமும் கிட்டாததால் வீடமைக்கும் பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ஐ-3-203)

# ஆஸ்திரேலியாவிலுள்ள இலங்கைத் தூதர் ஜானக பெரேராவைத் திருப்பி அனுப்புக!

## அந்த நாட்டு அரசிடம் பாதுகாவலர் சங்கம் கோரிக்கை

1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குடாநாட்டில் அப்பாவி இளைஞர், யுவதிகள் காணாமற்போனமைக்கு அப்போது யாழ். மாவட்டப் படைத்தளபதியாக இருந்த இப்போது ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக இருக்கின்ற ஜானக பெரே ராவே முக்கிய காரணமானவர்.

எனவே, அவரை ஆஸ்திரேலிய அரசு இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டும்.

- இவ்வாறு ஆஸ்திரேலியா அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்கும் பாதுகாவலர் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்க மண்டபத்தில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திருமதி இன்பராணி செல்வராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பகுதியில் படை அதிகாரியாகக் கடமையாற்றிய ஜானக பெரேராவே தமது பிள்ளைகள், உறவினர்கள் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனதற்கு பிரதானமானவராக இருந்தார். அவரே பல இளைஞர்களை நேரடியாகக் கைது செய்து கூட்டிச்சென்றார் என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சங்கத்தின் உறுப்பினர்கள் விரைவில் கொழும்புக்குச் சென்று ஆஸ்திரேலியத் தூதுவரையும் அதிகாரிகளையும் நேரில் சந்திக்கவுள்ளதுடன் ஏனைய தூதராலயங்களுக்கும் சென்று மகஜர்களைக் கையளிக்கவுள்ளனர் என்று செயலாளர் திருமதி து.கமலநாயகி கூறினார்.

காணாமற்போன தமது உறவினர்கள், பிள்ளைகள் தொடர்பாக மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனுடன் கலந்தாலோசனை செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

(து-111)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஐந்து பேருக்குப் பிடியாணை

நீதிமன்றுக்கு சமுகமளிக்காத ஐந்து பேரை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்ய சாவகச்சேரி நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து பேருக்கே பிடியாணை பிறப்பிக்கப்பட்டு அவர்களை இம்மாதம் 26ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலீஸாரும் இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பிரிவினரும் கடந்த 19ஆம் திகதி இரவு வரணி, மிருசுவில் ஆகிய பகுதியில் திடீர்ப் பரிசோதனைகளை நடத்தினார்கள்.

இப்பரிசோதனையின்போது வரணிப் பிரிவில் நான்கு பேரும் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் ஒருவரும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நபர்களுக்கெதிராகக் கடந்த 20ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த ஐந்து பேரும் நீதிமன்றுக்கு சமுகமளிக்காததால் இவர்களுக்குப் பிடியாணை பிறப்பித்து எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் பொலீஸாரைப் பணித்தார். (8-117)

# நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடாதோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே23

நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடாத வணிக நிலையங்கள் மீது அளவைகள் திணைக்களத்தின் பரிசோதகர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் பரவலாகப் பல்வேறு இடங்களில் பரிசோதகர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின்போது முத்திரை இடப்படாத நிறுத்தல் அளவை உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்த உரிமையாளர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் நிறுத்தல் அளவைகள் குறித்து மக்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் செய்திருந்தனர். இதனையடுத்து, அளவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் பணிப்பின் பேரில் பரிசோதகர் குழுவினர் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர் - எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடாதவர்கள் உடனடியாகத் தமது உபகரணங்களுக்கு முத்திரை இட்டுக் கொள்ளும்மாறும் அவ்வாறு செயற்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இதனால், உபகரணங்களுக்குரிய முத்திரைகளை இட்டு அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுத்தல் அளவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாகவும் முத்திரையிடும் பணிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் பிரதி புதன்கிழமை தோறும் யாழ்.செயலகத்தில் உபகரணங்களுக்கு முத்திரை இடும் பணிகள் நடைபெறும் எனவும் அளவைகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

(8-204-203)

# பல் சம்பந்தமான நோய்களால் தீவக மாணவர்கள் பாதிப்பு

ஊர்காவற்றுறை,மே23

அனலைதீவு,எழுவைதீவு, நயினாதீவு பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் முன்பள்ளி சிறார்களில் அநேகர் பல் சம்பந்தமான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன்படி முன்பள்ளி சிறார்களில் ஐம்பது சதவீதமானோரும், பாடசாலை மாணவர்களில் எழுபத்தைந்து சதவீதமானோரும் பற்கள் சம்பந்தமான நோய்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மேற்படி பகுதிகளுக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.ஜெய்கணேஸ் தெரிவித்தார்.

இதனால், மாணவர்கள் மத்தியில் பற்சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் முதற்கட்டமாக இக்கருத்தரங்கு கடந்த பதினாறாம் திகதி நயினாதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி பகுதிகளில் செயற்படும் புலம்பெயர்ந்தவர்களின் ஒன்றியங்கள் மற்றும் பொதுஅமைப்புகளின் உதவியுடன் முன்பள்ளி சிறார்களுக்கு பற்பசைகள், பற்தூரிகைகள் என்பன வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (து-16)

## நாளை

*வைகாசி 10*
*செவ்வாய்க்கிழமை*
*24.05.2005*
*திதி : பிரதமை*
*பின்னிரவு 12.27 வரை*
*நட்சத்திரம் : அனுஷம்*
*பிற்பகல் 03.39 வரை*
*வெசாக் மறுநாள்*
*சுபநேரம் : 10.22 - 11.52*
*ராகுகாலம்: 02.52 - 04.22*
*(யாவும் பழைய நேரப்படி)*

# 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இந்த மாதத்துடன் நிறுத்தம்

வலி.மேற்கு,மே23

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான ஜீவனோபாயக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா இந்த மாதத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசஅதிபர் கே. கணேஷ் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ஏ-9 தரை வழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஜீவனோபாயக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபா மே மாதத்துடன் முடிவுக்குக் கொண்டு வரப்படவுள்ளது என்றும் -

பிரதேச செயலகங்களில் ஜீவனோபாயக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படாமல் இருக்கின்றவர்களின் படிவங்களைப் பூரணப்படுத்தி கிராமிய புனரமைப்புக்குழுவின் சிபார்சுடன் அனுப்பி வைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

(து-175)

## உதயவாக்கு

உழைப்பின் வேர்கள் கசப்பானவை;
ஆனால், அதன் கனி இனிப்பானது!.
-சீனப் பழமொழி.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

12 XXXX தொடர் இலக்கமுடைய மிட்சுபிசி லான்சர் சிவப்பு நிற கார் விற்பனைக்குண்டு. (Full Option) தொடர்பு: 0777 758147, 077 3249711. (44468)

நல்ல நிலையிலுள்ள SUZUKI - GS 125 மோட்டார் சைக்கிள் சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (C/42942)

நல்ல நிலையிலுள்ள ரொயாட்டோ கொரில்லா புதிய மொடல் 18 - கார் விற்பனைக்கு உண்டு (உரிமையாளர் வெளிநாடு செல்லவுள்ளார்). தொடர்பு: 61, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (45751)

## வீடு விற்பனைக்கு

நெடிமாலை இறப்பர்வத்தை பெப்பிலியான வீதியில் (தெகிவளை விஷ்ணு கோயிலுக்கு அருகில்) 15 பேர்ச் விஸ்தீரணமுள்ள 06 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய 27/52, ஆம் இலக்க வீடு விற்பனைக்குண்டு. நேரடி தொடர்புக்கு: T.P.: 0112 730590. (45654)

அச்சுவேலி ஜோன் ராஜ வீதியில்4 பரப்புக் காணியில் அமைந்த 3 படுக்கையறை, களஞ்சிய அறை, 2 வரவேற்பறை மற்றும் இணைந்த குளியலறையுடன் சகல வசதிகளும் உடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0773028402, 0112360963. (சி/42985)

## காணி விற்பனைக்கு

அளவெட்டியில் நல்ல சுற்றாடலில் வீடு கட்டக்கூடிய3½ பரப்புக் காணியும் வீடு கட்டவும் தோட்டம் செய்யக்கூடியதுமான 7½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: த.தர்மச்சந்திரன் அரசகேசரிப்பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. தொ.பேசி.இல. 0776 258191. (45742)

உடுப்பிட்டி, சூய ஒழுங்கையில் உள்ள 5¾ பரப்பு (இராமலிங்கம் வெட்டை) காணியும் உடுப்பிட்டி கல்லுவம் வீதிக்கும் (செல்வச் சந்நிதி வீதி), பருத்தித்துறை வீதிக்கும் இடையில் உள்ள 16 பரப்பு வயல் (ஊரிவயல்) காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0112 638464. (45745)

சுன்னாகத்திலிருந்து புன்னாலைக்கட்டுவனுக்குச் செல்லும் வீதி முகப்புடன் சுன்னாகம் பட்டினசபை எல்லைக்கு அருகில் வெற்றுக் காணி 07 பரப்பு உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: 0112 582516, 0777 642937. (45748)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979 ஆம் ஆண்டு பிறந்த, சுவாதி நட்சத்திரம், நான்காம் பாதம் உடைய, பிரான்ஸில் வதிவிட உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த, அழகான, மெல்லிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். தொடர்பு: 021 4591793. (45677)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974, ஆயிலியம் முதலாம் பாதம், 8இல் செவ்வாய் (பாவம் கூடியது), முகாமைத்துவப் பட்டதாரி தற்போது அரசாங்க உத்தியோகம் பார்க்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு: சோ.இலகுநாதன், 71, உடுவில் வீதி, மானிப்பாய். (45732)

## கோழிக்குஞ்சு விநியோகம்

அதிவிசேட பிறிமா சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, மதுரா 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். T.P.: 222 2867, 222 3529. (45630)

தரமான நம்பர் 1 பகிரா புறோயிலர் குஞ்சுகள் 25.05.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், தாரகை, முதலாம்கட்டை, பருத்தித்துறை. P.ரவி, சாவகச்சேரி, ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக, கௌரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. T.P.: 222 3529, 222 2867. (45713)

## கடை விற்பனைக்கு

பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி தியாகு கலைக் கூடத்திற்கு முன்பாக உள்ள கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: 325, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. T.P.: 021222 6469 (வீதிச் சான்றிதழ் பெற்ற கடை). (45651)

## ஓட்டோ விற்பனைக்கு

JG என்ற ஆங்கில எழுத்துடைய நல்ல நிலையிலான புதிய ஓட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: லா.யஸ்ரீன் (ஆசிரியர்), இல.23, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 7593, 222 5576. (45734)

## தவறிவிட்டன

கிளிநொச்சி, திருநகர் வடக்கில் வசித்துவரும் சேதுபதி காந்தரூபியினது கடவுச்சீட்டும் (பாஸ்போட்) சிறு தொகைப்பணமும் கூடிய பணப்பையும் (பேர்ஸ்) மன்னார் முழங்காவிலுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் பிரயாணத்தின் போது தவறிவிட்டன. எனவே, இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். கந்தவேல் வெற்றிலை வாணிபம், பொது மத்திய சந்தை, கிளிநொச்சி. (தகுந்த சன்மானம் வழங்கப்படும்). (சி/42998)

சுப்பர்மடம், பருத்தித்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு சற்குணராஜா என்பவரது தே.அ. அட்டை இல 733164646V யாழ்.நகரில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (45733)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**
10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி/42495)

# சமய சந்நிதிகளில்

கரம்பொன் வேளாங்கன்னி ஆலயப் பெருவிழா நேற்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தினமும் திருப்பலி இடம்பெறும். எதிர்வரும் 28ஆம் திகதி திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும். மறுநாள காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (த-203)

○○○

ஏழாலை தெற்கு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை வைகாசி விசாகப் பொங்கல் விழா நடைபெறவுள்ளது. அதிகாலை 5 மணிக்கு வளந்துப் பொங்கல் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 மணிவரை பக்தர்களின் பொங்கல் நடைபெறும். 10 மணிக்கு விசேட பூசையும் 11 மணிக்கு ஆசீர்வாதமும் இடம்பெறும். 11.30 மணிக்கு அம்பாள் திருவீதியுலாவும் தொடர்ந்து மாகேஸ்வர பூசையும் நடை பெறும். (த-203)

○○○

நல்லூர் சிவபூதவராயர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன் தினம் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு பூதவராயருக்கு விசேட அபிசேக ஆராதனைகள் பூசைகள் என்பன நடைபெற்று வருகின்றன. (த-203)

○○○

வண்ணார்பண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் இனறு திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நம்மாழ்வார் உற்சவம் நடைபெறவுள்ளது.

நம்மாழ்வார் உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தில்விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (த-203)


## இசைப் பிரியர்களே!

இசைவானில் இளமைத்துடிப்புடன் 15 ஆம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடக் காத்திருக்கும்

ஸப்தஸ்வரா! இசைக்குழுவின்

"ராக சங்கமம்"

"அலைகள் ஓய்வதில்லை!"

சப்தஸ்வராவின் ராகசங்கமமும் அவ்வண்ணமே!!

புகழ்பூத்த இசையமைப்பாளர்கள் ஸ்ரீகுகன், சிவராம் ஆகியோரின் இனிய இசையமைப்பில் திறமைவாய்ந்த இசை நட்சத்திரங்களுடன் கடல் கடந்து ஈழமண்ணுக்கு புகழ்சேர்த்த பாடகர் S. நிரோஜனுடன் ஈழத்தின் புகழ்பெற்ற பாடகர்களுடன்

"இந்தமண் எங்கள் சொந்தமண்" புகழ் S.G. சாந்தன் சிறப்புப் பாடகராக கலந்து கலக்கும்


ஸப்தஸ்வராவின் இராகசங்கமம்

| தொடர்பு: ஸ்ரீகுகன் (துளசி நெற்கொம்) கல்வியன்காடு சந்தை பின்புறம் ஆடியபாதம் வீதி, T.P.: 021- 4590746, 077 6146345 | மணிக்குரல் V. சற்குணன் 52, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 7535 | S. நிறோசன் மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0777 262405. |
|---|---|---|

(45688) (54-16)


## முதலாம் வருட இதய அஞ்சலி

தோற்றம் 08 - 05 - 1942



மறைவு 19 - 05 - 2004

**அமரர் செல்லையா குமாரசாமி**

ஓராண்டும் ஆயிற்றோ எம் ஒளிவிளக்கு அணைந்து
தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்
வேராக நீரிந்து எம் வேதனைகள் தீர்த்து வைத்தீர்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகிறோம்

27, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (45749)(26-14-18-42)

– குடும்பத்தினர்.

## காணிகள் விற்பனைக்கு

காணிகளின் விவரம்:

- கரவெட்டி வடக்கில் கன்பொல்லை வீதியில் அமைந்துள்ள 7பரப்புக் காணி இந்தக் காணியைச் சுற்றி மதில் உண்டு. இக்காணியும் முன்புள்ள வீடும்1990 ஆம் ஆண்டுக்கு முன் அறிவாலயமாகப் பாவிக்கப்பட்டது.
- கரவெட்டி உச்சில் அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வயல் தொடர் காணிகள் 80 பரப்பு, இந்தக் காணி கச்சோலை என்றும் கச்சோலை கிழக்கு என்றும் கூறப்படும்.
- கரவெட்டியிலுள்ள ஆனைப்பந்தி என்ற பெயரில் உள்ள தோட்டக்காணி 2 பரப்பு காணிக்கு நீர்ப்பாசன வசதி உண்டு. இந்தத் தோட்டம் நெல்லியடி - விக்னேஸ்வராக் கல்லூரி வீதிக்கும் நெல்லியடி யாழ்ப்பாண வீதிக்கும் இடையில் உள்ளது.

தொடர்புகளுக்கு:
திரு.க.குலவரதராசா
T.P.: 011 2693387, 0776650642.

(சி/42992) (42-18-14)

## அவசர கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் கடமையாற்றும் நீர் உயிர் வள ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இனறு திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலயத்திலுள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (த-204)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை இராமுப்பிள்ளை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராமுப்பிள்ளை அவர்கள் 21-05-2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் பற்குணன் (ஆஸ்திரேலியா), யோகராணி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பாதேவி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சிரைராசா மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சசிகரன் (ஆஸ்திரேலியா), சர்மிளா (ஆஸ்திரேலியா), நந்தினி (சுவிஸ்), நந்தகுமார் (லண்டன்), இராசகுமார் (ஆஸ்திரேலியா), ஜெயக்குமார் (யாழ்.பல்கலைக்கழகம், கலைப்பீடம்) பாலகுமார் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), நிரூபன் (பிரான்ஸ்), ஜெயரூபன் (பொறியியலாளர்), சோபனா (யாழ்.பல்கலைக்கழகம், கலைப்பீடம்) ஆகியோரின் பேரனும் அபிதாவின் (சுவிஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-05-2005) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி து.யோகராணி (மகள்).

இணுவில் தெற்கு,
இணுவில். (45750)(26-14-18-42)

## நீங்காத நினைவலைகள்

### முதலாம் ஆண்டு

தோற்றம் 10 - 12 - 1925



மறைவு 02 - 06 - 2004

அமரர்
**நடராசா கந்தையா**
திதி: பௌர்ணமி
(23-05-2005)

### ஏழாம் ஆண்டு

தோற்றம் 20 - 03 - 1925



மறைவு 02 - 06 - 1998

திருமதி
**கந்தையா தங்கரத்தினம்**
திதி :சதுர்த்தி
(22-05-2005)

ஆண்டொன்று ஆனதுவோ அப்பா
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து?
அம்மாவும் எமைப்பிரிந்து ஏழு
ஆண்டுகள் ஆகின்றன - இன்று
ஆறாத துயரம் கொண்டு விறகின்றோம்
நீங்களற்ற இவ்வுலகில் என்றும்
மாறாது அம்மா, அப்பா எம் துன்பம்.

"சிங்க வாசா",
கைதடி கிழக்கு, கைதடி.
(45744) (24-14-18-42)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# பேரம்பலம் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்

# ஜொலிஸ்ரார், பற்றீஸியன்ஸ் அணிகள் முதல் நாள் ஆட்டங்களில் வென்றன

யாழ்ப்பாணம்,மே23

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் எஸ்.பேரம்பலம் வெற்றிக்கிண்ணத்திற்கான அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 27.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களினை மட்டும் பெற்றது.

இதில் லக்சுமிகாந் 38 ஓட்டங்களையும் கோபிநாத் 34 ஓட்டங்களையும் சகிலேஸ்வரன் 31 ஓட்டங்களையும் கபிலன் 28 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழக அணி வீரர்கள் பாஸ்கரன் 6 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களினைக் கொடுத்து 3 விக்கெட்டினையும் பிரதீபன் 4 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் ராஜ்குமார் 6 ஓவர்களில் பந்து வீசி 17 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் சாத்வீகன் சிசோக்குமார் திலக்ராஜ் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணியினர் 24.5 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 144 ஓட்டங்களினை மட்டும் பெற்றனர்.

இதில் திலகராஜ் 27 ஓட்டங்களினையும் பார்த்தீபன் 16 ஓட்டங்களினையும் பாஸ்கரன் 15 ஓட்டங்களினையும் நவீனன் 12 ஓட்டங்களினையும் நிவாஸ்கர் 10 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரர்கள் நாதன் 4 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களினைக் கொடுத்து 3 விக்கெட்டினையும் ஆதவன் 4.5 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களினைக் கொடுத்து 3 விக்கெட்டினையும் லக்ஸ்மிகாந் 6 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் அபிலோஸ் 5 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 54 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஒல் கோல்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர், 30 ஓவர்களில் 5 விக்கெட்டினை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றனா.

இதில் ஜனன்ராஜ் 92 ஓட்டங்களையும் சுஜீவன் 65 ஓட்டங்களையும் தேவராஜ் 25 ஓட்டங்களையும் சுதர்சன் 21 ஓட்டங்களையும் விநோதன் 21 ஓட்டங்களையும் வையினஸ் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் தேவராஜ் 6 ஓவர்கள் பந்து வீசி 50 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்டினையும் திலீபன், கிரிதரன், பிரதீபன் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஒல் கோல்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 27.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

குகன் 11 ஓட்டங்களினையும் ஜெயசுதன் 14 ஓட்டங்களினையும் மயூரன் 10 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் வினோதன் 6 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டினையும் கொலின் 5 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டினையும் ஜக்சன், தேவராஜ் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். பற்றீசியன்ஸ் விளையட்டுக் கழக அணியினர் 188 ஓட்டங்களினால் வெற்றிபெற்றனர்.

(3-190-86)





ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர் பு.ஓங்காரமூர்த்தி கழகக் கொடியேற்றுவதையும், அணி வீரர்கள் ஓங்கார மூர்த்திக்கும், ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் உரிமையாளர் நாகரத்தினத்துக்கும் அறிமுகம்செய்வதைப் படங்களில் காணலாம்.

## உடுவில் மான்ஸ் இரு பிரிவிலும் வெற்றி

யாழ்ப்பாணம்.மே23

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பூப்பந்தாட்டப் போட்டியில் இருபிரிவிலும் உடுவில் மான்ஸ் ம.வித்தி. வெற்றி பெற்றுச் சம்பியனானது.

போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு-

19 வயதுப் பிரிவு

ஆண்கள் - உடுவில் மான்ஸ் ம.வித்தி., யாழ். இந்துக் கல்லூரி, யாழ்.பரியோவான் கல்லூரி.

பெண்கள் - உடுவில் மான்ஸ் ம.வித்தி., சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி. (3,203)

## பெண்களுக்கான வலைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே23

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளின் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் போட்டிகளில் பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (3-190)

## முன்பள்ளி விளையாட்டு விழா

சங்கானை ஜுப்பீற்றர் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கழகத்தின் தலைவர் பா.சிறிபவன் தலைமையில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராகவும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும், வலி.மேற்கு அரசியத்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு, வலிகாமம் மேற்கு முன்பள்ளி இணைப்பாளர் செல்வி நா.நிரஞ்சனா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-28)

## கரைதுறைப் பற்று கோட்டத்தில் கொக்குளாய் பாடசாலை முதலிடம்

புதுக்குடியிருப்பு.மே23

கரைதுறைப்பற்று கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கொக்குளாய் அ.த.க.பாடசாலை அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றியடைந்து.

இந்தப் போட்டிகள் கடந்தவாரம் வற்றாப்பளை மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.அன்ரனி ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மாவீரர் பெற்றோரும் கோட்டக் கொடியினை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் ஏற்றிவைத்தனர்.

போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு

★ கொக்குளாய் அ.த.க.பாடசாலை - 246 புள்ளிகள்.

★ குமுளமுனை மகா வித்தியாலயம் - 117 புள்ளிகள்.

★ புதுக்குடியிருப்பு வித்தியானந்தா கல்லூரி - 155 புள்ளிகள். (3-353-203)

## எல்லே போட்டிகள்

யாழ்ப்பாணம், மே23

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளின் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் போட்டிகளில் பெண்களுக்கான எல்லேபோட்டி நாளை செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை மனோகரா விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது. (3-190)

## விளையாட்டு

# கிளிநொச்சி வலய மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே23

கிளிநொச்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கீழ்ப்பிரிவு முடிவுகள் கடந்த 20ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தன.

ஏனைய பிரிவுகளின் முடிவுகள் வருமாறு-

**17 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

ச.சஞ்சித் - வட்டக்கச்சி ம.வி. நா.நத்சன் - நாகேஸ்வரா வித்தி., எஸ்.சிவப்பிரதீபன் - ஜெயபுரம் அ.த.க.பா.,

**200 மீற்றர்** - ச.சஞ்சித் - வட்டக்கச்சி ம.வி., சோ.பிரதீபன், தருமபுரம் ம.வி., எஸ். ஜங்கரன் - கிளி. பூநகரி ம.வி.

**400 மீற்றர்** - இ.சிறிதரன் - திருவையாறு ம.வி., த.சரன் - பளை மத்திய கல்லூரி., லை.ரூபகாந் - கிளிநொச்சி ம.வி.

**800 மீற்றர்** - கோ.சுரேஷ்கண்ணா - அக்கராயன் ம.வி., சி.லோஜிதன் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா., செ.பிரதீபன் - ஜெயபுரம் அ.த.க.பா.

**1500 மீற்றர்** - கோ.சுரேஷ்கண்ணா - அக்கராயன் ம.வி., செ.செந்தில்குமரன் - இராமநாதபுரம் ம.வி., எஸ்.ரகுபரன் - ஜெயபுரம் அ.த.க.பா.

**உயரம்பாய்தல்** - நா.றஜீபன் சிவநகர் அ.த.க.பா., இ.சத்தியரட்ணம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா., செ.சிவப்பிரதீபன் ஜெயபுரம் அ.த.க.பா.

**நீளம்பாய்தல்** - நா.றஜீபன் சிவநகர் அ.த.க.பா. , வி.சதீஸ் - தருமபுரம் ம.வி., வி.தினேஸ்கரன் - அக்கராயன் அ.த.க.பா.

**முப்பாய்ச்சல்** - நா.றஜீபன் - சிவநகர் அ.த.க.பா., வி.சதீஸ் - தருமபுரம் ம.வி., கோ.சுரேஷ்கண்ணா - அக்கராயன் ம.வி.,

**குண்டுதள்ளுதல்** - கு.மேகலன் - தருமபுரம் ம.வி.. சி.மாதுங்கன் - அக்கராயன் அ.த.க.பா., க.தனுஷன் - பளை மத்திய கல்லூரி.,

**தட்டெறிதல்** - சி.மாதுங்கன் - அக்கராயன் அ.த.க.பா., சி.லோஜிதன் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா., கு.சாரங்கன் - பளை மத்திய கல்லூரி.

**ஈட்டி எறிதல்** - சி.மாதுங்கன் - அக்கராயன் அ.த.க.பா., கு.மேகலன் - தருமபுரம் ம.வி., பா.ஜங்கரன் - ஜெயபுரம் அ.த.க.பா.

**4X100 அஞ்சலோட்டம்** - பூநகரி ம.வி., அக்கராயன் அ.த.க.பா., தருமபுரம் ம.வி.

**4X400 அஞ்சலோட்டம்**- பூநகரி ம.வி., வட்டக்கச்சி ம.வி., தருமபுரம் ம.வி.

**பெண்கள்**

**100 மீற்றர்** - யோ.வனிதா - பளை றோ.க.த.க.பா., ஜெ.கௌதமி - தருமபுரம் ம.வி., தி.துளசிகா - செல்லீயா தீவு அ.த.க.பா.

**200 மீற்றர்** - வே.திவ்வியவதனி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, யோ.வனிதா - பளை றோ.க.த.க.பா., ஜெ.கௌதமி - தருமபுரம் ம.வி.

**400 மீற்றர்** - செ.துஷிதா - பூநகரி ம.வி., எஸ்.நவநீதா - செல்லீயாதீவு அ.த.க.பா., பே.ஜஸ்மின் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**800 மீற்றர்** - செ.துஷிதா- பூநகரி ம.வி., எஸ்.நவநீதா - செல்லியாதீவு அ.த.க.பா., தி.எக்ஸியா - கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா.

**1500 மீற்றர்** -

செ.துஷிதா - பூநகரி ம.வி., தி.எக்ஸியா கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா., பா.பாலாம்பிகை - பாரதி வித்தியாலயம்.

**நீளம் பாய்தல்** - சு.கோசலா - முருகானந்தா ம.வி., எஸ்.விஜயதாரணி - முழுங்காவில் ம.வி., எஸ்.சப்ரா - நாச்சிக்குடா அ.த.க.பா.

**உயரம் பாய்தல்** - ந.ஜான்சி - முழுங்காவில் ம.வி., வே.திவ்வியவதனி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, யோ.வனிதா - பளை றோ.க.த.க.பா.

**குண்டு தள்ளுதல்** - சீ.தாரணி - அக்கராயன் ம.வி., ப.மேரிமக்ஸிலீலா - நாச்சிக்குடா அ.த.க.பா., வீ.பிரமிளா - மாசார் அ.த.க.பா.

**தட்டெறிதல்** .- சீ.தாரணி - அக்கராயன் ம.வி., இ.பகீரதி - கிளிநொச்சி ம.வி., ப.மேரி மக்ஸிலீலா - நாச்சிக்குடா அ.த.க.பா.

**ஈட்டி எறிதல்** - சீ.தாரணி - அக்கராயன் ம.வி., ச.துஷாந்தினி - வேரவில் இந்து ம.வி., ப.மேரி மக்ஸிலீலா - நாச்சிக்குடா அ.த.க.பா.

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்** - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, பூநகரி ம.வி., கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**4X400 மீற்றர் அஞ்சலோட்டம்** - பூநகரி ம.வி., கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா., தருமபுரம் ம.வி.,

**19 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

**100 மீற்றர்** - ம.சுதர்சன் - தருமபுரம் ம.வி., ம.அமிர்தராஜ் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, பிரதீபன் - கிளிநொச்சி ம.வி.

**200 மீற்றர்** - எஸ்.சுவேந்திரன் - திருவையாறு ம.வி., எஸ்.ஜசிதன் - பூநகரி ம.வி., ச.சாந்தகுமார் - பிரமந்தனாறு ம.வி.

**400 மீற்றர்** - செ.ஜியந்தரூபன் - கிளிநொச்சி ம.வி., ச.சாந்தகுமார் - பிரமந்தனாறு ம.வி., சி.அனோஜன் - வேரவில் இந்து ம.வி.

**800 மீற்றர்** - செ.ஜியந்தரூபன் - கிளிநொச்சி ம.வி., சி.அனோஜன் - வேரவில் இந்து ம.வி., வி.புவிகரன் - தருமபுரம் ம.வி.,

**1500 மீற்றர்** - செ.ஜியந்தரூபன் - கிளிநொச்சி ம.வி., ப.அலெக்ஸ்சாண்டர் - வட்டக்கச்சி ம.வி., சி.உதயகுமார் - கண்ணகையம்மன் வித்தி.

**5000 மீற்றர்** - அலெக்சாண்டர் - வட்டக்கச்சி ம.வி., எஸ்.பேணாட் - தருமபுரம் ம.வி., எஸ்.பிரதீபன் - திருவையாறு ம.வி.

**நீளம் பாய்தல்** - ம.சுதர்சன் - தருமபுரம் ம.வி., சி.பகீரதன் - பளை மத்திய கல்லூரி . எஸ்.ஹெறசிக்குமார் - தருமபுரம் ம.வி.

(தொடரும்)

# அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

1996.05.14 ஆம் நாள் முதல் இரணைப்பாலை வீதி,புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் **தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக்கிளை** 2005.05.23 ஆம் நாள் தொடக்கம் **தமிழீழ வைப்பகம் புதுக்குடியிருப்புக் கிளை** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**மேலாண்மைப் பணிப்பாளர்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி.42963) (39-14-18-24)

# ஓராண்டு நினைவஞ்சலி

மொட்டாக மண்ணில் 28 ~ 04 ~ 1924



வித்தாக விண்ணில் 03 ~ 06 ~ 2004

அமரர் **கந்தையா நடராசா**

செல்வத் திருமகனாய் சீர்பொலிந்திலங்கு
அன்பால் அறிவால் பண்பால் ஆளாக்கி
நல்ல நிலைப்படுத்தி நானிலமும் போற்ற வாழவைத்தீர்!
சொல்லாமல் எம் நெஞ்சங்களில் சோக தீபம் ஏற்றிவிட்டு
கன்றை இழந்த கறவைகளாய் கதற விட்டீர்!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதைவிட்டு
வைகுந்தம் வாழச் சென்றுவிட்டீர்! நாமோ
நித்தம் உந்தன் நினைவினிலே வாழ்கின்றோம்
ஆண்டு ஒன்று என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
அழியாத சித்திரமாய் எந்நாளும் நிலைத்திருப்பீர்!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*


தகவல்:
வ. சின்னத்துரை (மருமகன்),
*வெற்றிலைச் சாஸ்திரியார்,*
*கெருடாவில் வடக்கு, சாவகச்சேரி.*

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(சி-42924) (46-14-18-24)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 08 - 08 - 1917



மறைவு 23 - 04 - 2005

அமரர் **சின்னத்தம்பி மாணிக்கம்**
(முன்னாள் பிரபல ஒப்பந்தகாரர்,
திருகோணமலை - முல்லைத்தீவு மாவட்டம்)

**23-04-2005 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் சின்னத்தம்பி மாணிக்கம் அவர்களுடைய மரணச்செய்தி கேட்டு உடன் உதவிகள் புரிந்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் மற்றும் தொலைபேசி, தபால் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் மேலும் பல வழிகளில் ஒத்தாசை நல்கிய அனைவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (23-05-2005) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*"சிவ இல்லம்"*
*பொலிகண்டி.* (45668) (24-14-18)

தகவல்:
**குடும்பத்தினர்.**


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா,
வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து, மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு,
மூலவியாதிகள், மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:*

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: **2459**

(45130) (24-14-18)


## புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம்

கொழும்புத்துறை,மே23

மன்னார், மடு வீதியில் வைத்து அரச படைகளால் சுட்டுக்கொல்லப்பட்ட அருட்திரு.மேரி பஸ்ரியன் நினைவாக வருடாவருடம் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் புலமைப்பரிசில் கொடுப்பனவு இம்முறையும் 12 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற அடிப்படைப் பொருளாதார வசதியற்ற திறமையான மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

சமயசார்பற்ற இந்தக் கல்வி உதவித்திட்டத்திற்கு யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டத்திலிருந்து மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேறுகளுடன் விண்ணப்பங்கள் பங்குத்தந்தையர் ஊடாக ஆயர் இல்லம், த.பெ.இல.02., யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும் என்று புலமைப் பரிசில் திட்டச்செயலாளர் அறிவித்துள்ளார். (எ-30)

## மானிப்பாய் பாடசாலையின் தமிழ்த்தினப் பெறுபேறு

வலி.தென்மேற்கு,மே23

சண்டிலிப்பாய் கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை, வாசிப்பில் முதலாமிடத்தையும், கட்டுரை ஆக்கம், பேச்சுப் போட்டிகளில் 2ஆம் இடத்தையும், பா ஓதல் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

வித்தியாசாலை அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை இத்தகவலைத் தெரிவித்தார். (எ-135)

### கோப்பாய் மத்தியில் 25 வீடுகள் நிர்மாணம்

கோப்பாய்,மே23

கோப்பாய் மத்தி காந்தி கிராமத்திற்கு உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் புதிதாக 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதன் மூலம் அண்மைக்காலத்தில் வன்னிப் பகுதியிலிருந்து திரும்பி மீளக் குடியமர்ந்த இக் கிராம மக்களின் வசிப்பிட நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு ஏற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)

### நிவாரணம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே23

1996 - 1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோரிற்கு முதற் கட்டமாக நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமற்போனவரின் பெயர், முகவரி, முறைப்பாட்டுக்காரர், குடும்பத்தில் உள்ள அங்கத்தவர் தொகை, கைதுசெய்யப்பட்ட இடம், திகதி ஆகிய விவரங்களை உடனடியாக அன்னையர் முன்னணிக் காரியாலயத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி அன்னையர் முன்னணித் தலைவி செ. கனகாம்பிகை கேட்டுள்ளார். (3-12)

# பெயர் மாற்றம்

**முகாம் வீதி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரான நடராஜா நிஸ்சந்தன் ஆகிய நான் கடந்த மே 19, 2005 வியாழக்கிழமை முதல் எனது பெயரை,**

**நடராஜா விஸ்யந்தன்**

**என்று மாற்றம் செய்கின்றேன் என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.**

**ஆகவே, எனது பெயர் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களிலும் இனிமேல் நான் நடராஜா விஸ்யந்தன் என்றே கையொப்பம் இடுவேன் என்பதை அனைவருக்கும் அறிவிக்கின்றேன்.** (45728) (24-14-18)

*முகாம் வீதி, ஊர்காவற்றுறை.* - நடராஜா விஸ்யந்தன்.


# தேவை

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்**

எமது வர்த்தக நிறுவனத்திற்குப் பில் கிளாக் வேலையும் கணக்கு வேலையும் கணக்குப்பதிவு செய்யும் வேலையும் செய்யக்கூடியவர்கள் தேவை.
இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

★ **24-05-2005** *செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும்.*

*தொடர்பு:* **ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்**
338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(45685) (24-14-18)



**உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீக குரு**
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஜியின்
**வாழும் கலைப் பயிற்சி**
(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்சன்கிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடங்கிய)

## இலவச அறிமுக உரை

150 நாடுகளில் நடைபெறுகின்ற வாழும் கலைப் பயிற்சி பற்றிய இலவச அறிமுக உரை நிகழ்வு கீழ்க் கண்ட இடங்களில் நடைபெறுகின்றது.

23.05.2005–ஸ்ரீபரமானந்தர் சிறார், முதியோர் இல்ல ஆசிரமம், பருத்தித்துறை வீதி, வதிரி, கரவெட்டி.
தொ.பே.: 226 3136. மாலை 5 மணி (பு.நே.)
24.05.2005 – வீரசிங்கம் அரங்கு, யாழ்ப்பாணம்.
மாலை 4.30 மணி.

*அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்*

*மேலும் விவரங்களுக்கு:–*
**வாழும் கலை அறநிறுவனம், யாழ்ப்பாணம் மையம்.**
**தொ.பே.: 077 9059 549, 077 9059 544, 222 6048.**
**www.artofliving.org** (45721)


# ஐந்தாம் ஆண்டு நினைவு

மலர்வு 1929 - 01 - 18



உதிர்வு 2000 - 05 - 18

அமரர் **வல்லிபுரம் சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய சுங்க உத்தியோகத்தர்)
திதி: 23-05-2005

**ஆண்டுகள் ஐந்தாகியும் உங்கள்**
**அன்பும் பாசமும் பரிவும் என்றும்**
**மனதை விட்டகலாதே ஐயா....**

*"சிவஸ்தான்"*
*தச்சனோடை,*
*புலோலி தெற்கு, புலோலி.*

உங்கள் மறைவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

(45599) (24-14-18)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1940 - 07 - 23



உதிர்வு 2000 - 05 - 17

அமரர் **சபாபதி திருநாவுக்கரசு**
(முன்னாள் அதிபர், யா/நல்லூர் ஸாதனா பாடசாலை,
யா/கலட்டி அ.மி.த.க. பாடசாலை)
திதி: 23-05-2005

**அன்பின் ஒளியாய்**
**எங்கள் மனங்களில் விடிவெள்ளியாய்**
**என்றும் வீற்றிருக்கும்**
**குடும்பத்தின் ஒளியே!**
**ஐந்து வருடங்கள் சென்றாலும்**
**எம் நினைவு மட்டும் உங்களுடன்**

*1/5, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
**மனைவி, மகள்,**
**பேரன், உறவினர்.**

(45599) (24-14-18)

# சுயதேடலை ஊக்குவிக்கும் கல்வியே மாணவரின் எதிர்கால வாழ்வுக்கு உதவும்

மனித வள விருத்திக்கான சாதனம் கல்வியே. ஒரு நாட்டின் பாடசாலை மாணவர்களே கல்விப் பயிற்சியினூடாக ஒரு நாட்டின் மனித வளமாக ஆக்கப்படுகின்றார்கள். மாணவர்கள் தளிர்விடும் மனித வளமாகும். மாணவ அபிவிருத்தி என்பது கல்வி அபிவிருத்தியேயாகும்.

எமது நாட்டின் தேசிய வருமானத்தின் பெரும் பகுதி கல்விக்காகவே செலவிடப்படுகிறது. அதாவது, மாணவ அபிவிருத்திக்காகவே செலவிடப்படுகின்றது. இச் செலவீனத்தின் 80 % ஆசிரியர்களுக்கான சம்பளமாக வழங்கப்படுகின்றது. ஆசிரியர்கள் பெருமளவு வினைத்திறனுடன் கற்பிக்கிறார்கள். ஆனால், ஆசிரியர் மாணவர் உறவு விருத்தியடையவில்லை. இதனால், கல்வியின் வினைத்திறன் வளரவில்லை. ஆசிரியர் மாணவர் உறவே கல்வியின் உயிர்ப்படு அம்சமாகும்.

யுத்தத்திற்குப் பின்னுள்ளகால கல்விப் புனரமைப்புப் பற்றி 2003 ஆம் ஆண்டு ஜூலையில் பாரிஸில் கூடிய உலக வங்கி, யுனெஸ்கோ, கல்வித்திட்டமிடலுக்கான சர்வதேச நிறுவனம் ஆகியவை சேர்ந்த மாநாட்டில் ஆசிரிய வகிபங்கு பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதில் ஆசிரியர் 'அன்புடனும், பண்புடனும் பணியாற்றுதல்' முக்கிய எதிர்ப்பார்ப்பாக முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஆசிரிய செயற்றிறன் விருத்தியே மாணவ அபிவிருத்திக்கான கருவாக அமைய முடியும்.




பொருளாதார நெருக்கடியாலும், யுத்த நெருக்கடியாலும் முழுச் சமூகமுமே குழம்பியிருக்கும் இன்றைய காலகட்டத்தில் 'அன்புடன்செயற்படுதல்' என்பது மிகக் கடினமான எதிர்பார்ப்பாகவுள்ளது. ஆனால், அன்பிற்காக எந்நேரமும் ஏங்கித் தவிக்கும் மாணவ சமூகத்தைச் சீர்ப்படுத்த அவர்களின் அன்புத் தேவையை ஓரளவேனும் நிறைவு செய்ய ஆசிரியர்கள்தான் அர்ப்பணிப்புடன் முன்வரவேண்டும். அவ்வாறு ஆசிரியர்களை அன்புக் களத்திற்கு அழைக்கும் வரவேற்புமனோபாவத்தை அல்லது ஊக்கலை மாணவ சமூகத்திடம் கிளர்ந்தெழ வைப்பதனால் மாணவ அபிவிருத்தியைச் சாத்தியமாக்கலாம்.

மாணவர்களின் அன்புத் தேவை பூர்த்தியாக்கப்படுவதற்கு பாடசாலைகளைக் களமாக்க மாணவர்களே சுயமாகச் செயற்படத்தக்க மாணவ அபிவிருத்திச் செயற்பாடுகளை நாம் திட்டமிட்டு வழிநடத்த வேண்டும். இதற்கான முன்மொழிவுகள் கல்வியாளர்களிடமிருந்தும், கல்வி ஆர்வலர்களிடமிருந்தும் பெற்றோர், சமூகம், ஆசிரியர், அதிபர்களிடமிருந்தும் வரவேற்கப்படும்.

**மாணவ அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய சில முன்மொழிவுகள்**

1. மாணவர் நடத்தை ஆசிரியர்களது முழுமையான அன்பைச் சம்பாதித்துக் கொள்ளும் வகையில் திட்டமிட்டு வழிகாட்டப்படவேண்டும்.

**'We look to the teacher teacher look to us'**

'நாங்கள் ஆசிரியரைப் பார்க்கின்றோம். ஆசிரியர் எங்களைப் பார்க்கிறார்' என்ற வாசகத்தின் உட்பொருளாக மாணவர் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

2. மாணவர்கள் முற்றாக பாடசாலையை நேசிக்கவும். நம்பிக்கை வைத்து இரட்டுற இணையவும் ஏற்ற மனப்பாங்கினை வளர்த்துக்கொள்ளல்.

3. வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களும் (Carrier Guidance) ஆலோசனைகளும், துறைசேர் வழிகாட்டல்கள், தொழில்சேர் வழிகாட்டல்கள் மூலம் மாணவர் தம் எதிர்காலம் பற்றி நம்பிக்கை ஒளியை ஊட்டுதல்.

4. வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும் (Loco theraphy) 'லோகோ திறபி' அணுகுமுறையால் மாணவர்களை விழிப்புணர்வு பெறத்தக்க செயற்பாடுகளினூடே துலங்க வைத்தல்.

5. மாணவர்களைச் சமூகப் பொறுப்புடையவர்களாகவும் பொதுப்பணிநாட்டமுடையவர்களாகவும் பொதுச் சொத்துக்களைப் பேணுபவர்களாகவும் செயற்படவைத்தல்.

6. சிந்தனைத் திறன் விருத்திக்கான செயற்பாடுகளை வழங்கி மாணவர் பொறுப்புணர்வுடனும், விழிப்புணர்வுடனும் செயற்பட வைத்தல்.

7. மாணவர் தலைமைத்துவ செயற்பாட்டிற்கான அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒழுங்கு முறையிலும் தொடர்ச்சியாகவும் இயங்கத் துணை செய்து உயிர்ப்புப் பெற வைத்தல் மூலம் மாணவர்களை ஆக்கத்திறன் வாய்ந்தவர்களாக மாற்றுதல்.

8. பாடசாலை மாணவர்களது சொத்துடமை ஆசிரியர் மாணவர்களது (Substitute Parents) மாற்றுப் பெற்றோர் என்ற கருத்திற்கான பாடசாலைக் கல்வி நிலையைத் தோற்றுவித்தல்.

9. நல்லொழுக்க ஈடுபாடு என்பதனை பல்வேறு மறைபொருள் செயற்பாடுகளால் (Hidden Activities) விழிப்புணர்வு பெறவைத்தல்.

10. கல்விக்கான இடர்பாடுகளை நீக்க உதவுதல்.

a. உடல், உள ரீதியான பின்னடைவுகளை நீக்க ஏற்கனவே உள்ள வாய்ப்புக்கள், வழிமுறைகளைப் பயன்படுத்த ஊக்கமளித்தல்.

b. குடும்பச் சூழ்நிலை, (Split Families) பிளவுபட்ட குடும்ப நிலை இதனால், பாதிப்புறும் மாணவர்களைப் பாதிப்பினின்றும் சுயமாக விலக வழிகாட்டுதல்களை வழங்குதல்.

c. மாணவர் ஈடுபாடு இவற்றிற்கான போதிய வாய்ப்புக்களைப் பெருமளவு ஏற்படுத்தித் தருதல்.

11. குடும்பம், சமூகம், பாடசாலை பற்றிய விரிந்த எண்ணக்கருவை விருத்தி செய்து மாணவர் விரிசிந்தனை (Divergent Thinking) விருத்திச் சூழலை உருவாக்கித் தருதல், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குடியுரிமைக் கல்வி, வரலாற்றுக் கல்வி போன்ற பாடங்களின் ஆழத்தை மாணவர் அனுபவித்து கருத்தியல் ரீதியான உணர்வினை (Transformation) பெற வைத்தல்.

இத்தகைய பல்வேறு செயற்பாடுகள் மூலம் பாடசாலை ஈடுபாடு, சுயநம்பிக்கை, பொறுப்புணர்ச்சி, கற்றலில் ஆர்வம் இவைகளால் 100% மாணவர்களையும் செயற்படச் செய்வதன் மூலம் கல்வியை மனித வள முதலீடு என்ற வகையில் மனித வள உற்பத்திக்கருமமாக மாற்றத்தக்க சகல செயற்பாடுகளையும் செயற்படுத்தி மாணவ அபிவிருத்தியைக் காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும்.

**குமாரசாமி சண்முகநாதன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
மாணவ அபிவிருத்தி – வலிகாம வலயம்.

மாணவர்கள் உடல், உள ஆத்மீக விருத்தியினைப் பெற்றுச் சமநிலை ஆளுமையுடையோராக (Balance Personality) செய்வதற்கான சகல ஒத்துழைப்பும் சகலரிடமும் பெறப்படும்.

இது ஒரு பூர்வாங்கச் செயற்பாடு. இதில் அக்கறையுள்ள அனைவரும் இது பற்றிய ஆக்கபூர்வ ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் நல்க வேண்டும்.

மாணவர்கள் எமது எதிர்கால மனித வளம். இன்று அது விரயம் செய்யப்படுகின்றது. அதாவது, முழுமையான அபிவிருத்தியைப் பெற வழிவகை செய்யப்படவில்லை. 100 பேர் பாடசாலையுள் நுழைந்து 2% மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்கிறார்கள். 2% மாணவர்கள் தொழில்துறை வாய்ப்பைப் பெறுகிறார்கள். ஏனைய 96% மாணவர்களும் வளமான மனித வளமாகப் பயன்படச் செய்யப்படுவதிலேயே மாணவர் அபிவிருத்திக் கருமம் என்பது முழுமையடைய முடியும். இது அனைவரதும் ஆக்கபூர்வமான பொறுப்பும், கடமையும் என்பதை உணர்ந்த செயற்பாடு உடனடியாகத் தேவைப்படுகின்றது. ★

# கல்விச்சாலைக் காட்சிகள்




சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த ஒன்றுகூடலின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் கி.சுரேந்திரகுமார் மற்றும் கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை, பிரதி அதிபர் வி.சண்முகநாதன், காப்பாளர் திருமதி எஸ்.கருணானந்தன், உயர்தர மாணவர் மன்றத் தலைவர் க.கோபிநாத் ஆகியோர் மதிய போசன விருந்தில் கலந்துகொண்ட போது எடுக்கப்பட்ட படம்.
(படம்: தொல்புரம் செய்தியாளர்)



கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்துக்கு கரவெட்டி கிழக்கு தெடுத்தனையைச் சேர்ந்த ஜயாத்துரை மார்க்கண்டு 70 ஆயிரம் ரூபா பெறுமதியான கணனித் தொகுதி ஒன்றை அதிபர் வ.கணபதிப்பிள்ளையிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

மட்டுவில் தெற்கு வளர்மதி கல்விக் கழகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட பரிசில்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: கைதடிச் செய்தியாளர்)





மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி பா.பொன்னுச்சாமி மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். சிறப்பு விருந்தினரான தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆலோசகர் கா.சிவசுப்பிரமணியம் மற்றும் வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன், உபஅதிபர் க.தேவநேசன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.
(படம்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

## Jaffna College Institute of Technology Vaddukoddai

### மோட்டார் வாகன மின்னிணைப்பு பயிற்சி
### (MOTOR VEHICLE WIRING PRACTICE)

காலம்: 6 மாதங்கள
(முழுநேர செயல்முறைப் பயிற்சி)
கல்வித் தகைமை: ஆண்டு 9 இற்கு மேல்படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-
இயக்குநர்,
**யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை.**
எமது காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று உடனடியாகப் பதிவுசெய்துகொள்ளவும்.
**விண்ணப்ப முடிவு திகதி: 30-05-2005**
T.Phone:0602213139. Email: jcit@sltnet.lk
(சி-42988)(26-14-18)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி
(மகேஸ் அக்கா)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி அவர்கள் 11-05-2005 புதன்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (இருபாலை) அவர்களின் அன்பு மனைவியும் சின்னத்துரை - பாக்கியத்தின் அன்பு மகளும் கதிரவேலு - பொன்னுப்பிள்ளையின் அன்பு மருமகளும் திருமதி சதானந்தன் பத்மராணி, சந்திரகுமாரன் (குமார்-பிரான்ஸ்), இந்திரகுமாரன் (இந்திரன் - பிரான்ஸ்), மகேந்திரகுமாரன் (மகேந்திரன் - லண்டன்), சசிக்குமாரன் (மயூரன் - கொழும்பு M.S.ரவல்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சதானந்தன் (சரஸ்வதி மில், கொக்குவில்), உமாதேவி (பிரான்ஸ்), துஸ்யந்தி (லண்டன்), தர்சிகா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் ஈஸ்வரி, காலஞ்சென்ற ஞானம்மா, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை (பொலீஸ் உத்தியோகத்தர்), முருகேசபிள்ளை (M.S.ரவல்ஸ், கொழும்பு), காலஞ்சென்ற சேனாதிராசா, வில்வராசா, சோதிமலர் ஆகியோரின் மைத்துனியும் தினேஷன், ரூபேஸன் (கனடா), கிருஷாயினி, திலக்ஷன், செந்தூரன், தனுஷன், அனி, றம்மியா, அலன் (பிரான்ஸ்), அஜேய் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-05-2005) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **முருகேசபிள்ளை** M.S. ரவல்ஸ் (0112314339),
மருமகன் - (சதானந்தன் - சரஸ்வதி மில் 021 222 3105 கொக்குவில்),
மகன் - **மயூரன்** M.S. ரவல்ஸ் - கொழும்பு) 0777 875264.
**குமார்** (பிரான்ஸ் - 0033164660508),
**மகே** (லண்டன் 00442085795695).

உப்புமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

(45743)(26-14-18)

## ஆசிரிய ஓய்வுதியர் சங்கப் பொதுக்கூட்டம்

கோப்பாய், மே23

வலி.கிழக்கு ஆசிரியர் ஓய்வூதியர் சங்க புனர்நிர்மாணப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி சண்முகநாதன் நினைவு மண்டபத்தில் சங்கத் தலைவர் த.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-72)

## பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், மே23

யாழ்.இந்துக் கல்லூரி இன்றறக்ட் கழகத்தினர் வருடந்தோறும் பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் பொதுஅறிவு வினாடி வினாப் போட்டி நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகளின் இன்றறக்ட் கழகங்களைச் சேர்ந்த 6 போட்டியாளர்கள் பொறுப்பாசிரியருடன் போட்டி நடைபெறும் தினத்தன்று வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-203)

**வாடிக்கையாளர்களே...**
பாஸ்போட், அடையாள அட்டைப் படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்துப் பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

**மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்**

62 / 16, ஸ்ரான்லி வீதி, (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,) யாழ்ப்பாணம். 0714168475
யாழ். வீதி, மானிப்பாய். T.P: 021-222 2884
E.mail: moorthylazer@yahoo.com
(C-42566) (54-15)

## தவறிவிட்டது

கொழும்பில் இருந்து யாழ்.நகருக்கு வரும் வழியில் முகமாலைச் சோதனைச் சாவடியில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய மரூன் கலர் பாக் (Bag) 19-05-2005ஆம் திக[illegible] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தய[illegible]து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்[illegible]வும். சன்மானம் வழங்கப்படும்.

**வீ.முருகையா,**
முதலியார் வளவு,
K.K.S. வீதி, சுன்னாகம்.
T.P.: 0776590420.
(48727)

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
## அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் - 2005

மேற்படி கூட்டம் எதிர்வரும் (29.05.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு (புதியநேரம்) பாடசாலை "முத்துக்குமாரு அரங்கில்" தலைவர் திரு.வே.ஞானகாந்தன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால், அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

திரு.நா.சுந்தரராஜா,
செயலாளர்.

குறிப்பு: பிரேரணைகள் யாவும் அலுவலகத்தில் 27.05.2005 பி.ப. 6.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 680 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 17-5-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5431066-5446005 | |

வெற்றி இலக்கங்கள்
**03 18 42 49**

லக்கினம் இடபம்

ஜக்பொட் பரிசு ரூபா.47,09,850/- வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 54,34,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,24,426 | 10/- | 32,44,260/- |
| 2.இலக்கங்கள் | 29,758 | 20/- | 5,95,160/- |
| 1.இல லக்கினம் | 29,519 | 30/- | 8,85,570/- |
| 2.இல லக்கினம் | 2,675 | 100/- | 2,67,500/- |
| 3.இலக்கங்கள் | 800 | 500/- | 4,00,000/- |
| 3.இல லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 47,09,850/- | - |
| மொத்தம் | 3,87,260 | - | 72,09,740/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 72,09,740/-
தொடர் இல. 4498696 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 மே 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி வெற்றி

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5433917-5-42
5436776-9-95
5435295-6-68
5435371-7-63
5431945-9-89

# 4 ஆவது அகவையில் யாழ்ப்பாணத்தில்
## காலடி எடுத்து வைக்கும்




**metropolitan**
NAVAHALA



**Metropolitan** wishes to thank our valued and loyal Customers for their confidence and trust in our Organization as well as our Authorized Distributor **M/s Navahala** on the occasion of our **Third Year** Anniversary in providing value added products and services in Jaffna.

யாழ்.நகரில் 3 ஆண்டுகள் இடையறா சேவையில் நம்பிக்கை வைத்த வாடிக்கையாளர்கள், வியாபார பங்காளிகள் அனைவருக்கும், மெற்றோபொலிற்றனும், கூட்டு நிறுவனமும் நவகலாவும், தங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

இனிவரும் ஆண்டுகளில் எமது ஸ்தாபனமும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நவகலா நிறுவனமும் இணைந்து சகல பகுதிகளுக்கும் சேவையை விஸ்தரிக்கும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

Metropolitan Office (Pvt) Ltd.
Navahala,
200, K. K. S. Road, Jaffna.
Tele./Fax: 021 222 5462
Email: metropolitanjaffna@yahoo.com

(C/42965)(51-18-16)

# முல்லைத்தீவில் நிக்கொட் - II திட்டங்கள் ஜூலையில் ஆரம்பம்

முல்லைத்தீவு.மே23

நிக்கொட் II இற்கான வேலைத்திட்டங்கள் எதிர்வரும் ஜீலை மாதம் முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து 4 வருடங்கள் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தில் 60 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கல்வித் திணைக்களத்தில் 30 வேலைத் திட்டங்களும் (துணுக்காய் வலயம் 15, முல்லைத்தீவு வலயம் 15), சுகாதாரம் கூட்டுறவு மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளுக்கு தலா 5 வேலைத்திட்டங்களும், கமநல அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றிற்கு தலா 3 வேலைத்திட்டங்களும் விவசாயத் திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றில் தலா இரண்டு திட்டங்களும் கட்டடத் திணைக்களம் மற்றும் அரச மிருக வைத்திய திணைக்களம் ஆகியவற்றில் தலா ஒரு திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தம்மால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை முன்னுரிமை அடிப்படையில் உடன் அனுப்பிவைக்குமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலக நிகொட் திட்ட உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (கு-410-353)

# காணிப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நடமாடும் சேவை

அளம்பில், மே23

முல்லைத்தீவு, செம்மலையில் காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்னெடுப்பதற்கான நடமாடும் சேவை கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது.

முல்லைத்தீவு உதவி அரச அதிபர் ஏ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நடமாடும் சேவையில், மாகாண பிரதி காணி ஆணையாளர் ப.ரவிசங்கர் பங்குகொண்டார்.

இந்நடமாடும் சேவைமூலம் காணி பிரிவிடல், காணி மாற்றம் மற்றும் காணிப்பிரச்சினைகள் தொடர்பான 160 பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட்டன என்றும்-

25 பேருக்கு அரசகாணிகளில் 2பரப்பு வீதம் அனுமதியளிக்கப்பட்டு காணி உறுதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்-

செம்மலைக் கிராம சேவையாளர் புஸ்பராஜா தெரிவித்தார். (எ-416-202)

# மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ஐ.நாவின் உதவியுடன் புனரமைப்பு

முல்லைத்தீவு.மே23

முல்லைத்தீவு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தைப் புனரமைப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் 5 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாக மாவட்ட மேலதிகப் பதிவாளர் என்.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லை மாவட்டப் பதிவாளர் அலுவலகம் மாவட்டச் செயலகத்திற்கு அருகிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வந்தது. அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் அந்த அலுவலகம் முற்றாகச் சேமடைந்தது.

இதனால் பதிவாளர் அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக மாவட்டச் செயலகத்தின் ஒரு பகுதியில் நடைபெற்று வந்தன. அங்கு போதிய இடவசதிகள் இல்லாத காரணத்தினால் தமது தேவைகளை நிறைவேற்ற வரும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைத் தவிர்க்கும் முகமாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் ஆகியோர் எடுத்த முயற்சியின் பயனாக சேதமடைந்த அலுவலகத்தை புனரமைப்புச் செய்வதற்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் 5 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன என்றும் மிகவிரைவில் பதிவாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் அங்கு ஆரம்பிக்கப்படும் என்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் மேலும் தெரிவித்தார்.

(கு-410-353)

# குடும்பநல உத்தியோகத்தர்கள் நியமனம் கோரிப் பகிஷ்கரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொண்டு அடிப்படையில் கடமையாற்றிய வெளிக்கள குடும்பநல உத்தியோகத்தர்கள் தமது கடமையைப் புறக்கணிப்புச் செய்துள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவில் போதியளவு வெளிக்கள குடும்பநல உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் அதற்காக பயிற்சிபெற்ற தொண்டர்களே கடமையாற்றி வந்தனர்.

பல வருடங்களாகத் தொண்டு அடிப்படையில் சேவையாற்றிய இவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

போரூட் நிறுவனமே இவர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்புத் தொகையை வழங்கி வந்தது.

தற்போது விலைவாசி அதிகரித்துள்ளமையால் தமது ஊக்குவிப்புக் கொடுப்பனவை அதிகரித்துத்தர வேண்டும் அல்லது அரச சேவையில் உள்ளீர்க்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தே இவர்கள் கடமையைப் புறக்கணித்துள்ளனர்.

எனவே, உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து மக்களின் நலனைப் பேண உதவுமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(கு-353-203)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மதிய உணவு

புதுக்குடியுருப்பு.மே23

முல்லைத்தீவு வலயப் பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்தினால் கல்விக்கான உணவுத்திட்டத்தின் கீழ் மதிய உணவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

புதுக்குடியிருப்பு கோட்டத்திற்குட்பட்ட 2 பாடசாலைகளில் இத்திட்டம் செயற்படுத்தபட்டு வருவதாகவும், இதனால் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளான தேராவில் தமிழ் வித்தியாலயம், இருட்டுமடு தமிழ் வித்தியாலயம், குரவில் தமிழ் வித்தியாலயம், மண்ணாகண்டல் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் மாணவர்களின் வரவு முன்னரை விட அதிகரித்துள்ளதாகவும் புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜி.எஸ்.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக இருட்டு மடு தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.கலாதேவானந்த கருத்து தெரிவிக்கையில்:-

எமது பாடசாலை அமைந்துள்ள பகுதி மிகவும் பின்தங்கிய கிராமம். இங்குள்ள மக்கள் அன்றாடம் கூலிவேலை செய்தே தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். இப்படியான சூழலில் உலக உணவு ஸ்தாபனத்தின் இத்திட்டமானது இப்பகுதி மக்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

இதன் பின்னர் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், மாணவர் வரவும் அதிகரித்துள்ளது.

ஆனால், உணவுப் பொருள்கள் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. அத்துடன் மரக்கறிகளுக்கான கொடுப்பனவும் உரியகாலத்தில் கிடைப்பதில்லை. இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து செயற்பட்டால் மேலும் நன்றாக அமையும் - என்றார்.

இதேவேளை, கரைதுறைப்பற்று கோட்டத்தில் தற்போது தரம் 1 மாணவர்களுக்கு விசேட காலை உணவு வழங்கப்படுகிறது. 27 பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவனுக்கும் தலா 20 ரூபா பெறுமதியான காலை உணவு வழங்கப்படுகிறது. (கு-410-353)

# புதுக்குடியிருப்பு பிரதேச மகளிர் சங்கம நிகழ்வு

முல்லைத்தீவு.மே23

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட மாதர் சங்க உறுப்பினர்களுக்கான சங்கம நிகழ்வு ஒன்று கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு கிழக்கு மாதர் சங்கத் தலைவி மாலதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை பொன் அமுதன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் தயானந்தா ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. பெண்கள் ஆய்வுமையப் பொறுப்பாளர் சுதாமதி, புதுக்குடியிப்புப் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் மலரவன் மற்றும் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் தயானந்தா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்படப் பல்வேறு விடயங்கள் பற்றி இந்தச் சங்கம நிகழ்வில் ஆராயப்பட்டன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த மாதர் சங்கங்களின் நூற்றுக்கு மேற்பட்ட பெ ண்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

(கு-410-353)

# ஈழத்துத் தமிழ் இலக்கியம் தனது அத்தியாயம் ஒன்றை இழந்தது....!

ஈழத்து இலக்கிய உலகு அண்மை நாள்களில் பல படைப்பாளிகளை இழந்து நிற்கிறது. அவர்களில் காலத்தால் பிந்தியவரும், படைப்பு நிலையில் முந்திய மூத்தவராகவும் விளங்கிய செம்பியன் செல்வனை இறுதியாக இழந்துள்ளோம்.

ஆறுமுகம் இராஜகோபால் என்ற இயற்பெயர் கொண்ட இவர், ஒரு புவியியல் பட்டதாரியாகப், பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி, ஆசிரிய சேவையினுள் நுழைந்துகொண்டார்.

புகழ்பூத்த மாணவ பரம்பரையொன்றின் உருவாக்கத்திற்குக் காத்திரமாக பங்காற்றிய இவர் அதிபராக, கல்வி நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.இது இவரது ஒரு பக்கம்.

அதிகம் அறியப்பட்ட அவரது பக்கம் செம்பியன் செல்வன் என்ற பெயரில் தமிழிலக்கிய உலகுக்கு இவரளித்த சிறப்பான பங்களிப்பெனலாம்.

சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், சினிமா எழுத்துரு விமர்சனம் எனப் பலதுறைகளிலும் தனது கைவண்ணத்தைக் காட்டிய எழுத்துலக சிற்பி இவர் இவரது சிறுகதைகள் 'அமைதியின் இறகுகள்', 'சர்ப்ப வியூகம்' என்ற இரு தொகுதிகளில் வெளிவந்துள்ளன. இன்னமும் தொகுக்கப்படாத சிறுகதைகளும் உள்ளன. அத்துடன், ஈழகேசரி, மறுமலர்ச்சி, சுதந்திரன் பத்திரிகைகளின் தொகுப்புக்களிலும் இவரது கதைகள் இடம்பெற்றுள்ளன.

வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் வெற்றிபெற்ற நெருப்பு மல்லிகை. கானகத்தின் கானம் என்பன இவரது நாவல் நூல்களாக வெளிவந்துள்ளன.

'விடியலைத்தேடும் வெண்புறா', என்ற நாவலையும் இவர் எழுதியுள்ளார். இவரது குறுங்கதை நூறு வீச்சும் ஆழமும் கொண்ட சின்னக் கதைகளாகக் கொள்ளத்தக்கவை. அதுதவிர பல உருவகக் கதைகளையும் இவர் எழுதியுள்ளார்.

'மூன்று முழு நிலவுகள்' இவரது முழுநீள நாடக நூலாகும். இது தவிர நூலுருப் பெற்ற நாடகங்களின் தொகுதியாக 'விடிய இன்னும் நேரமிருக்கு' என்பது விளங்குகிறது.




ஈழத்து மூத்த சிறுகதைப் படைப்பாளிகளை அறிமுகம் செய்து இவரெழுதிய 'ஈழத்துச் சிறுகதை மணிகள்' நூல், பலருக்கும் பயன்படும் வரலாற்று வழிகாட்டியாக மிளிர்கின்றது.

ஆன்ம விசாரங்களாக, தனது தத்துவார்த்த அன்மீக சிந்தனைகளை 'நாணலின் கீதை' என்ற நூல் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளார்.

செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவல் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டபோது, அதன் திரைக்கதை, வசனம் ஆகியவற்றைச் செம்பியன் செல்வனே எழுதியிருந்தார். அந்தப் பிரதிக்கு A தரச் சான்றிதழ் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஓர் அஞ்சலிக் குறிப்பு

விவேகி, அமிர்த கங்கை ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்து புதிய படைப்பாளிகளுக்குக் களமும் வளமும் தந்தவர் இவர். அதுமட்டுமன்றி புவியியல், நுண் அறிவியல், அறிவுக் களஞ்சியம் ஆகிய சஞ்சிகைகளிலும் இணை ஆசிரியராகவும், ஆசிரியர் குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

நிதர்சனம், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பணியாற்றிய அவர் வெளிச்சம் சஞ்சிகைக்கு காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளார். அத்துடன் இங்கு தயாரிக்கப்பட்ட குறும் படங்கள், விவரணப் படங்கள், முழு நீளப்படங்கள் ஆகியவற்றின் உருவாக்கத்துக்கு ஆரம்ப காலங்களில் தனது அனுபவ அறிவையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

அவர் ஒரு தீவிர வாசகராகவும் இருந்தார். தேர்ந்த நூல்கள் முதல் இலகு வாசிப்பு நூல்கள் வரை எல்லாவற்றையும் படித்து, தனது அறிவுத் தேடலை வளர்த்துக்கொள்வார். நோய்வாய்ப்பட முன்பு யாழ்.மாநகரசபையின் நல்லூர் கிளை நூலகத்தில் அவரைத் தினமும் சந் திக்கலாம்.

இலக்கிய உலகில் தனது விமர்சன எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் கலகக்காரன் எனப் பெயர்பெற்றவர் செம்பியன். ஆனால், அவர் யாரிலும் பகைமை பாராட்டுவதில்லை. யாருடனும் நட்போடு பழகுவது அவரது சிறப்பம்சம். அவரது சகபாடிகளுக்கு 'வயதுப் பிரச்சினையில்லை. புதிய படைப்பாளிகளை நட்புணர்வோடு அணுகி, இலக்கிய சங் கதிகளைப் பகிர்ந்துகொள்வார்.



இலக்கிய உலகின் 'சூட்சுமங்கள்' பலவற்றை இளம் படைப்பாளிகளுக்கு சுவையோடு எடுத்துரைப்பார். 'இப்படி எழுது' எனக் கட்டளையிடும் ஆலோசனைகளை முன்வைக்காமல், தான் படித்தவை, தான் அறிந்தவை, தான் எழுதியவைகளைக்காட்டி மறைமுக வழிகாட்டலை மேற்கொள்ளும் திறன் அவருக்கேயுரியது.

தனக்குச் சரியென்று பட்டதை வெளிப்படையாகச் சொல்லும் பண்பு கொண்ட அவர், தனக்கு ஏற்படும் சந்தேகங்களை எவரிடமும் கேட்டுத் தெரிந்துகொள்ளும் ஆர்வமுடையவர்; அது தனது மாணவர்களாயினும்கூட. எளிமையும், தன்னடக்கமும், இனிமையாகப் பழகும் சுபாவமும் கொண்ட ஒரு ஜாம்பவான் அவர்.

மூத்த படைப்பாளிகளாயினும் சரி, இளம் படைப்பாளிகளாயினும்சரி அருமையான ஓர் இலக்கிய நண்பரை இழந்து நிற்கின்றனர். ஈழத்துத் தமிழிலக்கியம் தனது அத்தியாயம் ஒன்றை இழந்து நிற்கிறது.

**இயல்வாணன்**

தமிழினம் தமிழீழ விடுதலையை ஆசித்த ஒரு தேசாபிமானியை இழந்து நிற்கிறது!

எல்லோர் மனதிலும் நீங்காது நிறைந்துள்ள பழுதிலா மனிதனுக்கு எங்கள் அஞ்சலிகள்.

★

# சுற்றுச் சூழல் நாடகப் போட்டியில் யாழ்.இந்து மகளிர் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம்,மே23

சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நடத்திய தமிழ் - சிங்கள நாடகப் போட்டிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் நாடக அணி தேசிய ரீதியில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

அடுத்தமாதம் 5ஆம் திகதி வரும் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 8 மாவட்டங்களின் பாடசாலைகளுக்கு இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி நாடக அணி முதலாமிடத்தையும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி நாடக அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

மூன்றாம் இடத்தை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அணி ஒன்று பெற்றுக் கொண்டது.

கொழும்பு நுகேகொட லும்பினி பாடசாலையில் இந்த நாடகப் போட்டி இடம்பெற்றது.(3-203)

## திருப்பணிச்சபை அமைப்பு

வலி.தென்மேற்கு,மே23

பண்டத்தரிப்பு காலையடி தெற்கு முத்தர் கேணி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் திருப்பணிகளை மேற்கொண்டு புனரமைப்புச் செய்வதற்காகத் திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பணிகளை மேற்கொள்வதற்காக வைரவபெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அண்மையில் பாலஸ்தானம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

(எ-135)


**இளவாலை பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் வருடாந்தத் திருநாள்**

பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த நவநாள் 17ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் அருட்திரு பிரான்சீஸ் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் மாலை 5.30 மணிக்குத் திருச்செபமாலையுடன் நவநாள் திருப்பலியும் மறையுரைகளும் நடைபெறுகின்றன. 25ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்குத் திருப்பலியுடன் நற்கருணைப் பவனியும் 26ஆம் திகதி காலை 7மணிக்குக் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச்சுருபப் பவனியும் இடம்பெறும்.

பங்குத்தந்தையும்
இளவாலை. (45753)(26-14-34) ஆலய பரிபாலன சபையினரும்.



**இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணில் 20 - 11 - 1928

விண்ணில் 15 - 05 - 2003

அமரர்
**காசிப்பிள்ளை மயில்வாகனம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: வைகாசிப் பூரணை

அன்புத் தெய்வமே! எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
தங்களோடு நாம் வாழ்ந்த அந்த இனிய காலங்கள்
என்றும் எம் நெஞ்சங்களை விட்டகலாது!

"கோயில் வளவு",
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (45752)(26-14-34)

அன்னாரது குடும்பத்தினர்.



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 26 - 10 - 1950

இறப்பு 23 - 05 - 2004

**அமரர் இராசப்பு மரியதாஸ்**

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
யாரப்பா உங்களை மறப்பர்?
ஓடுகின்ற கதிரவன் உறங்க நினைத்தாலும்
நீங்கள் ஒரு பொழுதும் ஓய்வெடுக்க நினைத்ததில்லை!
நோயின்றி, நொடியின்றி நொடிப்பொழுதில்
வெகுதூரம் கடுகதியில் காலனுடன் சென்றுவிட்டீர்கள்
எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும் - எங்கள்
நிழலில்தான் மழலையாக வருவீர்கள் அப்பா!

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி, பருத்தித்துறை.

- குடும்பத்தினர்.

(45746)(46-14-34-26)



**மரண அறிவித்தல்**

**திருமதி முருகேசபிள்ளை நாகேஸ்வரி**

அளவெட்டி, அம்பத்தையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசபிள்ளை நாகேஸ்வரி அவர்கள் 21-05-2005 சனிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசபிள்ளையின் அன்பு மனைவியும் அமரர் புஸ்பராணி மற்றும் கருணாகரன் (கனடா), ஜெயராணி (கனடா), நவந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் கந்தையா மற்றும் சரஸ்வதி, சண்முகம், விக்னேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகலிங்கம், சரஸ்வதி (கனடா), ஜெயக்குமார் (கனடா), அரவிந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கமலசிறி (லண்டன்), சுஜிதா (லண்டன்), தர்மகுலராஜா, குமுதா, சேரலாதன் (கனடா), சிவகலா (கனடா), மயூஷாந் (கனடா), அர்யுன் (கனடா), சபீனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சோபிதா (கனடா), வேதிகா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24-05-2005) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பத்தை,
அளவெட்டி. (45755)(26-14-34)

தகவல்:
செ.யோகலிங்கம்
(மருமகன்).





**2ஆவது பிறந்த நாள் வாழ்த்து**

கொழும்புத்துறை கிழக்கு கி. கிருஸ்ணபாலன் - வேலணை கிழக்கு அன்பரசி தம்பதிகளின்
அன்புப் புதல்வி செல்வி கஜனி (கனி)

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (23.05.2005) திங்கட்கிழமை இல. 73, இலந்தைக் குளம் வீதி, அரியாலையில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் குதூகலத்துடன் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார். கனிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரியமாமா, அத்தை, சின்னமாமா, அத்தை, மச்சான் தரணிதன், சித்தப்பா, சித்தி, அண்ணன் பானுஜன் மற்றும் உற்றார், உறவினர்கள் நாச்சியம்மன் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

Dr. ஐ. பாலசுப்பிரமணியம்
(அம்மப்பா).
வேலணை கிழக்கு,
வேலணை 4.

செல்வி கஜனி (கனி)
23 05 2005

(C/42994) (56)


## பொருளியல் பாட வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே23

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பொருளியல் பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல்லூடக எறிகருவியின் உதவியுடன் 'பரீட்சை எதிர்பார்ப்புகள்' தொடர்பாகக் கருத்துரையை ஆசிரியர் வே.கருணாகரன் நிகழ்த்துவார்.

பொருளியல் இரண்டாம் வினாத்தாள் பற்றிய இறுதிக்கருத்தரங்கு எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைக் கலந்துகொண்டு பயனடையுமாறு அதிபர் வி.மாணிக்கம் கேட்டுள்ளார்.

(த-204)

## பெண்சாரணியர்கள் கூட்டம் புதனன்று

யாழ்ப்பாணம்,மே23

பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சாரணிய வழிகாட்டுநர்களைக் கலந்துகொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் ஜே.மித்திரரஞ்சன் கேட்டுள்ளார்.

(3-204)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே23

சங்கத்தானை வைரவசுவாமி, கந்தசுவாமி ஆலய விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆலய மணடபத்தில் நடைபெறவுள்ளது.

செ.சபாரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்குச் சாவகச்சேரி நகர சபை உத்தியோகத்தர், சாவகச்சேரி வடக்கு கிராம உத்தியோகத்தர் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். ஆலய பரிபாலன சபை தொடர்பான விடயங்கள் இதில் கலந்துரையாடப்படவுள்ளன.

இவ்விடயம் தொடர்பான பிரேரணைகள் இருப்பின் அவற்றை எழுத்து மூலம் 'சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி ஆலய பரிபாலன சபை, செயலாளர், சாவகச்சேரி' என்னும் முகவரிக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-203)

## வைரவிழாவை ஒட்டி பல்வேறு போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே23

நல்லூர், சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

50 மைல் சைக்கிள் ஓட்டம், 6 பேர் கொண்ட 5 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி, பாட்டுக்குப் பாட்டு, 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி, இசை, நடனப் போட்டி, வழுக்குமரம் ஏறுதல், தலையணைச் சமர், கயிறு இழுத்தல், பொது அறிவுப்போட்டி, மெதுவான சைக்கிள் ஓட்டம் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் மேற்படி சனசமூக நிலைய வைரவிழாச் சபையுடனோ நிர்வாகத்திடமோ தொடர்புகொண்டு அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-203)


பாதிக்கப்பட்டபெண்களின் பொருளாதார மேம்பாட்டு நிதி திரட்டலுக்கான நாடக ஆற்றுகை

மீண்டும்



**பிரமாண்டமான காட்சிப் படிமங்களுடன மேடைக்கு வரும்.....**

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை
இடர் வெல்லும் அஞ்சா நெஞ்சு
வேண்டி மேடையில் குமுறும் ஒரு பெண்!

தே.தேவானந்தின்
**'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்'**

த.றொபேட்டின் இசையில் நா.சிவசிதம்பரத்தின்
கவி வரிகளுடன் ஆற்றுகையாளர்களின்
வெளிப்படுத்தலுடன் அரங்கில் உயிர்பெறும் நாடகம்

காலம்: இன்று (23.05.2005)
திங்கட்கிழமை
காலை 10.30 மாலை 3.30



இடம்: லக்ஷ்மி திரையரங்கு
நெல்லியடி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நுழைவுச்சீட்டுக்களை மண்டப வாயிலிலும் பெற்றுக் கொள்ளமுடியும்.

அன்பளிப்பு ரூபா 50/=, 100/=

Active theatre Movement
(C/43001)(42-14-34-26)



**21.05.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு இல. 1608

01 51 63 68 01

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.62,00,300/- வெல்லப்படவில்லை

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 53,44,050/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5,000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 350 | 1,000/- | 3,50,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,187 | 500/- | 5,93,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 16,948 | 40/- | 6,77,920/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 16,031 | 20/- | 3,20,620/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,41,785 | 10/- | 24,17,850/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 70,12,700/-

300285989-4-65
300294679-1-71
300280903-9-02
300292261-1-21
300291057-8-77

# தன்னைக் கொல்வதற்கு புலிகள் குறி வைத்துள்ளனர் என்கிறார் ஜெயலலிதா

சென்னை,மே23

விடுதலைப் புலிகளிடமிருந்து எனக்குத் தனிப்பட்ட - குறிப்பான - அபாயம் உள்ளது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் பணி, தற்கொலை வெடிகுண்டுப் பெண்மணி ஒருத்தியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்படி மத்திய உள்துறை அமைச்சகத்தில இருந்து எனக்குக் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு எனக்குக் கொலை அச்சுறுத்தல் இருந்தபோதும் புலிகளுக்கு எதிராக உறுதியான - சமரசத்துக்கு இடமில்லாத - நடவடிக்கைகளையும், நிலைப்பாட்டையும் நான் எடுத்து வந்துள்ளேன். இனியும் தொடர்ந்து எடுப்பேன்.

அப்படியிருக்க புலிகளுக்குத் தமிழகம் ஒரு தளமாக இருக்கிறது என்ற சாரப்பட ஒரு செய்தி பரப்பப்படுவது விசனத்துக்குரியது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா. மத்திய உள்துறை அமைச்சகத்தின் 2004 - 2005ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அண்மையில் வெளியாகியது.

அதில் பெற்றோல், டீசல், மருந்துகள் முதலிய அத்தியாவசியப் பொருள்களை இலங்கைக்குக் கள்ளத்தனமாகக் கடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழகத்தைத் தொடர்ந்து ஒரு தளமாகப் பயன்படுத்தி வருகின்றது - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தமிழகப் பத்திரிகைகள் பிடித்துக்கொண்டு ஜெயலலிதாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை வாரி இறைத்துவருகின்றன.

தமிழகத்தைப் புலிகள் தளமாகப் பயன்படுத்துகின்றனர் என மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை கூறுகின்றது எனப் பல தமிழகப் பத்திரிகைகள் தலைப்புச்செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியும் இந்த அறிக்கையைப் பிடித்துக் கொண்டு ஜெயலலிதாவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை அடுக்கி வருகின்றார்.

மேற்படி மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை, பத்திரிகைச் செய்திகள, சுப்பிரமணிய சுவாமியின் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை ஆட்சேபித்துத் தமிழக முதல்வர் ஜெயலலிதா தற்போது மத்திய உள்துறை அமைச்சருக்கு நேற்று விரிவான கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

அந்தக் கடிதத்திலேயே தமது உயிருக்குப் புலிகள் குறிவைத்துள்ளனர் என்ற தகவலையும் -

புலிகளுக்கு எதிரான தனது அரசின் ஆணித்தரமான கடும் நடவடிக்கை தொடரும் என்பதையும் -

குறிப்பிட்டிருக்கின்றார் ஜெயலலிதா.

# பௌர்ணமி விழா

யாழ்ப்பாணம்,மே23

யாழ்.தாவடி, இலங்கை ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்துடன் இணைந்து நடத்தும் வைகாசி பௌர்ணமி தின விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஸ்ரீ காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் செ.புஸ்பராசா தலைமையில் பிற்பகல் 3.30 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறும்.

இதில் சிறப்பு ஆன்மீக உரையை இந்து சமயத்தின் மகிமைகள் என்னும் தலைப்பில் ஆன்மீகப் பேச்சாளர் சி.சிவபாலன் நிகழ்த்துவார். தெய்வத்திரு மூவர் திருவுருவப் படங்களும் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன. 'எழுந்திரு! விழித்துக்கொள்!' என்ற தொனிப்பொருளில் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான கண்காட்சி இடம்பெறவுள்ளது.

கண்காட்சியில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வெளியிட்ட புத்தகங்கள் தெய்வத்திரு மூவர் திருவுருவப் படங்கள், பஜனை ஒலி நாடாக்கள் என்பவற்றின் விற்பனையும் இடம்பெறவுள்ளது. (ஒ-12)

# மின்சாரசபை மறுசீரமைப்புக்கு 10 ஆம் திகதிக்கு முன் நடவடிக்கை

## ஜனாதிபதி திட்டவட்டமான உத்தரவு

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்குள் நிறைவுசெய்ய வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மின்சக்தி,எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவைப் பணித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பில் ஏற்கனவே, மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் தனியான யோசனை ஒன்றைத் தயாரித்து எதிர்வரும் 26ஆம் திகதி மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சரிடம் கையளிக்க உள்ளன.

இதனையடுத்து மின்சாரசபை மறுசீரமைப்பு குறித்து ஆராயும் 13 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சுக் குழு இதனை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

எவ்வாறாயினும் அடுத்த 10 ஆம் திகதிக்குள் இதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதியை பெற்றுவிடுமாறு ஜனாதிபதி, மின்சக்தி அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

# பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளி சிக்கினார்

தென்பகுதியில் பல்வேறு கொலை, கொள்ளைகளுடன் தொடர்புடைய பிரபல பாதாள உலகத் தலைவர் உக்குவா பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்து செயற்பட்ட மேலும் நான்கு நபர்களைத் தேடி பொலீஸார் வலைவிரித்துள்ளனர்.

பொலீஸாரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு தலைமறைவாக வசித்து வந்த பிரபல பாதாள உலகத் தலைவர் உக்குவா வெலிகமைப் பொலீஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டார். அவரிடமிருந்து ரீ -56 ரக துப்பாக்கியும் அதற்குரிய ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வெலிகமைப் பொலீஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்தே வெலிகமையில் உள்ள வீடொன்றில் இருந்த சமயம் உக்குவா கைதுசெய்யப்பட்டார்.

நான்கு கொலைகளுக்காவும் பல்வேறுபட்ட கொள்ளைகள் மற்றும் கப்பம் பெறல் ஆள்கடத்தல் போன்ற சட்டவிரோதச் செயல்களுக்காகவும் தேடப்பட்டு வந்த உக்குவாவும் அவரது சகாக்களும் கடந்த பல மாதங்களாக பொலீஸாருக்கு டிமிக்கி கொடுத்து வந்தனர்.

இவரைக் கைது செய்ததன் மூலம் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாகப் பொலீஸாருக்குப் பல முக்கிய தகவல்கள் கிட்டியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வெல்லம்பிட்டியப் பகுதியில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த வேறுநபர்கள் மூவரை தெமட்டகொட விசேட பொலீஸ் பிரிவினர் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக கப்பட்டது.

# "பொப்லெப்" திட்ட ஆசிரியருக்குக் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் 'பொப்லெப்' திட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கான கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் இத்திட்டத்திற்குப் பொறுப்பான ஆசிரியரை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (எ-117)

# பொங்கல் உற்சவம்

சாவகச்சேரி,மே23

கச்சாய் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமும் காவடி விழாவும் இன்று இடம்பெறவுள்ளது. இரவு விசேட அபிசேகத்தைத் தொடர்ந்து பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது. (ஒ-12-31)

## மானிப்பாய் றோட்டறக்ட் கழகம்

நடத்தும் க.பொ.த உ/த

மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு

**இடம்: வட்டு. இந்துக் கல்லூரி**

திங்கள்: 23.05.2005 காலை 9-12 இந்துநாகரிகம் திரு.சிறீஸ்ல
மாலை 3-6 தமிழ் திரு.வேந்தன்

செவ்வாய்: 24.05.2005 காலை 9-12 அளவையியல்
S.S.மனோகரன், R.S.சந்திரன்

**இடம்: இணுவில் மத்திய கல்லூரி**

புதன் 25.05.2005 மாலை 3-6 அளவையியல்
S.Sமனோகரன், R.S.சந்திரன்

வியாழன்: 26.05.2005 மாலை 3-6 இந்துநாகரிகம்
திரு.சோதிலிங்கம்

செயற்திட்ட அனுசரணை:

**I.D.M**
K.K.S. Road, Jaffna. (சி-43001)(53-1-12-29)

## திருக்குமரன் சனசமூக நிலையத்தினர்

14.05.2005 அன்று நடத்திய

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலக்கம் | 18 |
| 2 ஆம் பரிசு இலக்கம் | 139 |
| 3 ஆம் பரிசு இலக்கம் | 41 |

மேற்படி பரிசில்களை இன்று (23.05.2005) திங்கட்கிழமை பெற்றுக்கொள்ளவும்.

கெருடாவில் வடக்கு.
சாவகச்சேரி. (சி-45003)(11-12-29) - செயலாளர்

# கண்ணீர் அஞ்சலி

## ஆறுமுகம் இராஜகோபால்

(செம்பியன் செல்வன்)

(ஓய்வு பெற்ற கோட்டக் கல்விபணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத் துயரில் நாமும் பகிர்ந்து கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(45763)(11-12-29)

# கண்ணீர் அஞ்சலி

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்

## ஆறுமுகம் இராஜகோபால்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துடன் நாமும் அத்துயரில் பகிர்ந்துகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி பாடசாலைச்சமூகம் (45760)(11-12-29)

# மரண அறிவித்தல்

## கந்தர் நாகப்பா

நாராயணா வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த கந்தர் நாகப்பா நேற்று (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம் இலட்சுமியின் அன்புக் கணவரும் கிருஷ்ணபிள்ளை (ஓய்வூதியர், யாழ்.மாநகரசபை), நவரத்தினம் (பாதுகாவலர், யாழ்.மாநகரசபை), துரைராசா (பாதுகாவலர், வீதி அபிவிருத்திச்சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் முத்தையா குடும்பத்தினரின் அன்புக்குரியவரும் நம்பிக்கைப் பொறுப்பாளருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாராயணா வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (45765)(53-11-12-29)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா நாகராசா

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை தற்பொழுது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா நாகராசா அவர்கள் 21.05.2005 சனிக்கிழமை வட்டக்கச்சியில் காலமானார்.

அன்னார் நமசிவாயம் - தையலம்மை அவர்களின் மகளாரும் நாகராசாவின் அன்பு மனைவியாரும் பொன்னர் - சின்னம்மாவின் அன்பு மருமகளாரும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, மங்களேஸ்வரன், கோணேஸ்வரி, கேதீஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தருமலிங்கம் காலஞ்சென்ற தில்லைநாதன் விஜயலெட்சுமி, நாகேந்திரம், நாகேஸ்வரி, கோசலா ஆகியோரின் அன்பு மிக்க மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2005) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வட்டக்கச்சியில் நடைபெற்று பூதவுடல் மம்மில் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சாந்தி வெதுப்பகம்'*
*அழகரெட்ணம் வீதி,*
*வட்டக்கச்சி.* (45759)(11-12-29)

தகவல்:
க.கஜபாலன் (நயினாதீவு 7 ஆம் வட்டாரம் - பேரப்பிள்ளை)

## திருமதி நாகரத்தினம் முருகேசு

மாதகலைப் பிறப்பிடமாகவும் 49/38K, முதலாவது கோயில் வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் முருகேசு நேற்றுமுன்தினம் (21.05.2005) சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காரைநகர் அருணாசலம் கந்தையா முருகேசு J.P. (முன்னாள் பதுளை ம.வி. அதிபரும் பதுளை மாநகர சபை உறுப்பினரும்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - தங்கம்மாவின் மகளும் காலஞ்சென்ற அருணாச்சலம் கந்தையாவின் மருமகளும் Dr.முத்துலிங்கசாமி (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராசா (பொறியியலாளர் -லண்டன்), சிவபாலன் (பட்டயக்கணக்காளர் - லண்டன்), ராசேந்திரன் (பட்டயக்கணக்காளர் -லண்டன்), காலஞ்சென்ற பசுபதி, புவனேஸ்வரி (லண்டன்), நீலாம்பிகை (கனடா), யோகராணி (வவுனியா), மங்களராணி (புத்தளம்), நவமணி (லண்டன்), கனகாம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கணேஸ் (P.H.I.), துரைசிங்கம் (ஓய்வுபெற்ற திட்ட அதிகாரி - கனடா), ரட்ணேஸ்வரமூர்த்தி (திட்டமுகாமையாளர்-NCASL), சிவக்குமார் (முகாமையாளர் -லண்டன்), தேவனந்தன் (பொறியியலாளர் - பிரான்ஸ்), லக்சுமி (விரிவுரையாளர் - லண்டன்), Dr.அலோஷ்னா (லண்டன்), உதயராணி (ஆசிரியர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லண்டனைச் சேர்ந்தவர்களான Dr.சித்திரா (அறிவிப்பாளர்), திருபரன் நளினி, தனுஷன், அனுஷன், யாழினி, நர்மதா, கவிதா (கனடா), சாந்தி (நோர்வே), ரட்ணகுமார் (ஜனசக்தி - வவுனியா), நிர்மல்குமார் (நீர்ப்பாசனத் திணைக்களம்-மாங்குளம்), திருமதி சிவபாலன் (சிங்கப்பூர்), புஷ்பம் (கொழும்பு), ஈஸ்வரி (திருகோணமலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற செல்வரத்தினம், துரைராஜா, நேசரத்தினம், இராமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தச்சனாங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49/38K, முதலாவது கோயில் வீதி,*
*வவுனியா.* (45758)(11-12-29)
*T.P.: 024 222 1812, 024 222 3157*

தகவல்:
T.இரட்ணேஸ்வரமூர்த்தி
(மருமகன்).


## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 11 ஸ்ரீ XXXX இலக்கமுடைய 'கொறலா E 50' கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
T.P. 0777 519440
(45762)(11-12-29)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட, original prima broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 23-05-2005 திங்கட்கிழமை இன்று பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை கிளையிலும், நெல்லியடிக்கிளையிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம்-தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் -திருநெல்வேலி, முருகன்-சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர்-19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி,நல்லூர்.
(சி-43002)

# வடக்கு நோக்கி வந்த நால்வர் புத்தளத்தில் வைத்துக் கைது!

கொழும்பு,மே 23

புத்தளம் பகுதியில் ஆயுததாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வர் நேற்றுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தளம் மாவட்ட சாலியவெவ எனும் இடத்தில் வீதிச் சோதனைச்சாவடி ஒன்றில் வைத்தே நேற்று இந்த நால்வரும் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கருணா அணியைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இவர்கள் நீர்கொழும்பு கொச்சிக்கடையில் இருந்து வாடகை வாகனம் ஒன்றில் அனுராதபுரம் ஊடாக வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்தனர் என்றும் -

அப்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் - சாலியவெவ பொலீஸார் தெரிவித்தனர். சோதனைச்சாவடியில் வாகனம் நிறுத்தப்பட்ட போது, சாரதி அவர்கள் தொடர்பாக சந்தேகம் தெரிவித்தார். இதனை அடுத்து அவர்கள் சோதனையிடப்பட்டனர். அவ்வேளை ஒருவரின் காலுறையினுள் கைத்துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய தோட்டாக்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இதனை அடுத்தே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு பொலீஸார் மேலும் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் நால்வரும் நேற்று புத்தளம் பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு அடுத்தமாதம் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஓ-12)

# கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்ப முடிவுதிகதி நீடிப்பு

தேசிய கல்வி நிறுவகம் நடத்திவரும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை அடுத்தமாதம் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வி நிறுவகம் இந்த நீடிப்பை வழங்கியுள்ளது.

2005-2006 ஆம் கல்வியாண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறிக்கு கடந்த பெப்ரவரி மாதம் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அப்போது விண்ணப்ப முடிவு திகதி 28.03.2005 என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் சுனாமிப் பாதிப்புக் காரணமாக பல பட்டதாரி ஆசிரியர்கள் இவ்விண்ணப்பம் கோரலை அறிந்திருக்கவில்லை. ஆதலால் தாங்களும் விண்ணப்பிக்க அவகாசம் தருமாறு கோரி மேன்முறையீடு செய்திருந்தனர். இதனையடுத்தே விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது. (ஓ-84)

# செம்பியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகாலம் முதலே தமிழீழத் தேசிய உணர்வுமிக்கவராக விளங்கிய இவர், தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலை நெஞ்சார ஏற்றுக்கொண்டவராவார். பல படைப்பாளிகள் போராட்டத்தைப் பதிவுசெய்யத் தயங்கிய காலத்திலேயே தனது படைப்புகளில் வெளிப்படையாக போராட்டத்தின் நியாயங்களையும், சமூக மேம்பாட்டு விழுமியங்களையும் இவர் பேசிவந்தமை குறிப்பிடத்தக்கது.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் கூட விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம், தமிழீழ கல்விக் கழகம், விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப்பிரிவு போன்றவற்றுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்து தன் எழுத்தாற்றலாலும், ஆழ்ந்த கல்விப் புலமையாலும் இவர் ஆற்றிய பணிகள் காலத்தால் நினைவு கூரத்தக்கவை. (ஓ)

# சாவகச்சேரியில் கோஷ்டி மோதல்!

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பகுதியில் நேற்று கோஷ்டி மோதல் இடம்பெற்றது. ஆலயத் திருவிழா ஒன்றைத் தொடர்ந்தே மோதல் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

இம்மோதலின்போது காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அப்பகுதியில் சுமுக நிலையை ஏற்படுத்துவதில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர், பொலீஸார் ஆகியோர் ஈடுபட்டனர்.(ஓ-117)

# ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் அது பின்னர் தள்ளிப்போனது.

நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்மும், சில சமயங்களில் மாதமுற்பகுதியில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனோடு கொழும்பு வரக்கூடும் என எதிர்பாக்கப்படுகின்றது.

அப்படி அடுத்த மாத முற்பகுதியில் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வரத் தவறினால் அடுத்த மாத நடுப்பகுதியில் அவர் இலங்கை வருவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாத முற்பகுதியில் ஹெல்கிஸன் இலங்கை வருவதோடு, பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மீண்டும் சூடுபிடிக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

# நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியை அடுத்து அங்கு நேற்று முற்பகல் விரைந்த பொலீஸார் அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தினர்.

பீடம் அமைக்கத் தயாரான பகுதியும், அதற்காகக் குழைத்த சிமெந்தும் அங்கு தற்போது காணப்படுகின்றன.

மேலும் அப்பகுதியில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில்

திருமலை - கண்டி வீதியில் 98ஆம் கட்டையில் அமைக்கப்பட்ட பாரிய புத்தர் சிலைக்கான வேலைகள் முடிவுற்று நேற்று முற்பகல் 9.30 மணிக்கு அது திறந்து வைக்கப்பட்டது.

வெசாக் மத அனுஷ்டானங்களை ஒட்டிய சந்தடிசாக்கில் திருகோணமலையில் பரவலாகப் பல இடங்களில் புத்தர் சிலைகளை அமைத்து பேரினவாத ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் முயற்சிகள் எடுக்கப்படுவதாக தமிழர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

# திருமலையில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகத் திரண்டு வந்தனர். போக்குவரத்துச் சேவைகளும் ஓரளவு வழமைக்குத் திரும்பின.

ஹர்த்தால் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதை அடுத்து நேற்று நகரில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்டவரிசையில் காத்து நின்று எரிபொருள்களைப் பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது. சமையலுக்கான எரிவாயுவுக்கும் நகரில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களான ஹர்த்தால் காரணமாக அரச, தனியார் வங்கிகள் மூடப்பட்டிருந்ததால் பொதுமக்கள் பெரும் சிரமமடைந்திருந்தனர்.

ஹர்த்தால் மூன்று நாள்களுக்கு விலக்கப்பட்டுள்ள போதிலும் அந்த மூன்று நாள்களும் அரச விடுமுறை தினம் என்பதால் வங்கிகள் திறக்கமுடியாத நிலையே நீடிக்கின்றது.

எனவே, வங்கிகளில் பணக் கொடுக்கல் வாங்கல் செய்யமுடியாமல் மக்கள் படும் அவதி தொடரும் நிலையே காணப்படுகின்றது.

எனினும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நகரில் சில தனியார் வங்கிகள் சில மணி நேரம் திறந்திருந்தது தமது வாடிக்கையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கின.

திருகோணமலை நகரில் ஏற்பட்ட பதற்றங்களை அடுத்து ரயில் நிலைய ஊழியர் விடுதியில் தங்கியிருந்த ஊழியர்களின் குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி ரயில் மூலம் மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்றுள்ளன.

நேற்றுமுன்தினம் நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோதும் பயிலுநர் பட்டதாரிகளை நிரந்தர சேவையில் உள்ளீர்ப்பதற்கான எழுத்துப் பரீட்சை நகரில் உள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது. ஐம்பது வீத்தற்கும் குறைவான பட்டதாரி பயிலுநர்களே பரீட்சைக்குத் தோற்றினர். பரீட்சை நிலையங்களுக்குப் பொலீஸார் பாதுகாப்பு வழங்கினர்.

நகரில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து நகரில் தங்கியிருந்த வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் திருகோணமலை நகரில் இருந்து வெளியேறி தலைநகர் கொழும்புக்குச் சென்றுள்ளனர். திருமலையில் நிலைமை சீரடைந்ததும் அவர்கள் அங்கு திரும்புவார்கள் என வெளிநாட்டு அரசசார்பற்றநிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை - கண்டி வீதியில் திருகோணமலை நகரில் இருந்து சுமார் பத்து மைல் தொலைவில் உள்ள பாலம்போட்டாறு பத்தினியம்மன் கோயில் பொங்கல் நிகழ்வு இம்முறை வழமைக்கு மாறாக நேற்று மதியத்துடன் நிறைவுபெற்றது.

நேற்று நகரில் உள்ள பிரசித்திபெற்ற பெற்ற ஆலயங்களில் இருந்து பொங்கல் பொருள்கள் வாகன ஊர்தியாக பலம்போட்டாறு பத்தினியம்மன் கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. நேற்று மதியம் பொங்கலுடன் வழிபாட்டு நிகழ்வு முடிவுபெற இருந்தது.

கடந்த காலங்களில் பொங்கல் விழா இரவிரவாக பல்வேறு நிகழ்வுகளுடன் நடந்தேறி வருவது வழமை. இம்முறை திருகோணமலை நகரில்" ஏற்பட்டுள்ள பதற்றத்தைக் கருதி வழிபாட்டு நிகழ்வு பகலுடன் முடிவுறுத்தப்பட்டிருக்கிறது. (க)

# திருகோணமலை நிலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ்மா அதிபர் மற்றும் முப்படைத் தளபதிகள் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியிருக்கின்றனர். அதேபோல் திருமலை மாவட்டத்தின் பதற்ற நிலைமைக்கான காரணிகள், அது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆகியன குறித்து விரிவான அறிக்கையொன்றில் அங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜனாதிபதியிடம் கையளித்திருக்கிறார்.

திருகோணமலையில் தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பிவருவதாகப் பாதுகாப்புத் தளபதிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டிய போதும், திருகோணமலை மாவட்ட சர்வமத தலைவர்கள் மற்றும் சமூக புத்திஜீவிகளைக் கொண்ட தேசிய நல்லிணக்க சபையொன்றை அமைக்குமாறு ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது பணிப்புரை விடுத்திருக்கிறார் எனத் தெரிகிறது. ஏற்கனவே 2002 ஆம் ஆண்டில் இவ்வாறான சபையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

திருமலை பஸ்நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை சம்பந்தமான விடயம் தொடர்பில் இந்த சந்திப்பின்போது கருத்து வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி தற்போதைய அமைதிச் சூழ்நிலையைக் குழப்பும் வகையில் அரசுக்கெதிரான திட்டமிட்ட செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் கவலை வெளியிட்டார் எனத் தெரிகிறது.

திருகோணமலைப் பதற்றம் தொடர்பாக உதயனுக்குக் கருத்து வெளியிட்ட பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இப்பிரச்சினைக்கு இரண்டொரு நாளில் தீர்வு கிட்டும் என நம்பிக்கை வெளியிட்டார்.

"நகரப் பகுதி பொலீஸாரின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ளது. சட்டம் - ஒழுங்கைப் பேணுவதில் பொலீஸார் மிகுந்த சிரத்தையுடன் உள்ளனர். சம்பந்தப்பட்ட தரப்புகளை அழைத்துப் பேசி, இணக்கத்தை ஏற்படுத்தி, சுமுக நிலையை உருவாக்குவோம். விரைவில் வழமைநிலை ஏற்படும்" - என்றார் பொலீஸ்மா அதிபர்.

"புத்தர் சிலையை அங்கிருந்து தற்காலிகமாக அகற்றும்படி நீதிமன்றத் தீர்ப்பு உள்ளதே அதனைச் செயற்படுத்துவீர்களா?" - என்று பொலீஸ்மா அதிபரிடம் கேட்டதற்கு, "அப்படி நீதிமன்றத் தீர்ப்பு ஏதுமில்லை சம்பந்தப்பட்டோருடன் பேசி, அவர்களின் உடன்பாடு, இணக்கத்துடன் புத்தர் சிலையை அகற்றுமாறே நீதிமன்றம் கூறியுள்ளது. அதற்கு முயற்சி எடுக்கிறோம். சகல தரப்புகளுடன் பேசப்படுகின்றது." - என்று பதில் அளித்தார் பொலீஸ்மா அதிபர். (க)

# நீர்ப்பாசனம் மற்றும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுகளில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 'சிமெக்' நிறுவனத்தின் நிபுணர்கள்,கொழும்பு 'சீலோட்டர்' நிறுவனத்தின் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆய்வுப் பணிகளை முன்னெடுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களையும், 'கார்ப்' அமைப்பு 40 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளன.

இந்தக் குழு ஆரம்ப அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இறுதி அறிக்கையை இது ஒன்பது மாதங்களில் சமர்ப்பிக்கவிருக்கின்றது. அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே பாரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது.

இந்தக் குழு நீர்வளங்களை ஆராய்ந்து நல்ல நீரைப் போதிய அளவு பெறக்கூடிய சாத்தியம் குறித்துப் பரிந்துரைக்கவிருக்கின்றது.

நிலத்தடி நீர், நில மேற்பரப்பு நீர், கடல் நீரை நன்னீராக்கல், மழைநீரைச் சேமித்தல் ஆகிய தலைப்புக்களில் தமது ஆய்வுகளைக் குழு மேற்கொண்டு வருகின்றது.

இரணைமடுவில் இருந்து நீரைப் பெறும் சாத்தியம், நிலாவரை கிணற்றில் இருந்து நீரைப் பெறும் சாத்தியம் உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் குழு ஆராய்கின்றது.

சுத்தமான குடி தண்ணீர் கிடைப்பதை உறுதிசெய்ததுடன் நீர் மாசடையாமல் தடுப்பதற்குச் சுகாதார வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் முன்வைக்கப்படும் முன்மொழிவுகளின் படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் பாரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

(எ-3-202-204)

# வெசாக் நிகழ்வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்லுறவில் வதைத்ததும், செம்மணியில் புதைத்ததும், சிறையிட்டு சித்திரவதை செய்ததும் கடந்த காலங்களுடன் கழிய இன்று அரசும் படையினரும் தமிழ் மக்களை அணைத்துக்கொள்வதாகவும் அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வதாகவும் பொருள்படுத்தும்.

ஆனால், இன்று நிலைமை என்ன?

கீரிமலையில் பிதிர்க்கடன் செய்வதற்கும் திருவடிநிலையில் தகனக்கிரியை செய்வதற்கும் படையினரின் அனுமதி தேவைப்படுகின்றது. பாலையூற்று தேவாலயத்தையும் கச்சதீவு அந்தோனியாரையும் தரிசிக்கப் படையினரின் ரட்சிப்புத் தேவைப்படுகின்றது. மாவிட்டபுரம் கந்தசாமியையும் கீரிமலை நகுலேஸ்வரரையும் வழிபட படையினர் வழிபடும் நேரத்தைப் பார்த்திருக்கவேண்டியிருக்கின்றது. ஆனால், ஒரே நாளில் திருகோணமலை சமாதான நகரத்தில் புத்தபிரான் எழுந்தருளி இடம்பெயர மறுத்து நின்கின்றார். இதனைப் பெரும்பான்மைச் சமூகத்தின் மேலாண்மை என்பதைத் தவிர வேறு எவ்வாறு பொருள் கொள்ள முடியும்?

இந்நிலையில் தமிழ்மக்கள் இவ்விழாக்களில் கலந்துகொள்வதானது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இப்பண்டிகையின் மூலம் அதன் வீடியோப் படப்பிடிப்பின் மூலம் 'தமிழ் மக்கள் அரசுடனும் படையினருடனும் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்' என்ற தோற்றத்தை உலக அரங்கில் ஏற்படுத்தமுயலும் அரசின் முயற்சிகளுக்குத் துணைபோவதாக அமையும்.

தமிழ் மக்கள், புத்த பிரானின் அகிம்சை நெறிகளுக்கோ அந்நெறிகளை உண்மையாகவே ஏற்றுக்கொண்ட சிங்கள மக்கள் கொண்டாடும் வெசாக் பண்டிகைக்கோ ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல.

ஆனால், அரசு காலங்காலமாக பௌத்தமதத்தின் பெயராலேயே சிறுபான்மை இனங் களின் மீதும், மதங்களின் மீதும் அதிகாரம் செலுத்திவந்துள்ளது. அதனாலேயே படையினர் கொண்டாடும் வெசாக் பண்டிகையில் கலந்துகொள்வதன் மூலம் அரசினதும் படையினரதும் எதிர்பார்க்கைகளுக்குத் துணைபோக வேண்டாம் என்று எம் தமிழ் உறவுகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம். - என்றுள்ளது.

தன்மானத் தமிழர் பேரவை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ். நகர பொது விளையாட்டு மைதானத்தில் வொசாக் நிகழ்வுகளை பிரமாண்டமான வகையில் காட்சிப்படுத்த படையினர் முற்பட்டுள்ளனர். அழைப்பிதழ்கள் அரச அதிகாரிகளுக்கும், சமூக முக்கியஸ்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இவை தமிழனை மதித்தல்ல. மாறாக தமிழன் மீதான தமது மேலாதிக்கத்தை நினைவூட்டி அச்சுறுத்துவதற்கானவை. இந்தவகை வஞ்சகத்தை - கபடத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசின் பேரினவாத மேலாதிக்கம் அனைத்துலகத்தினாலும் புரிந்துகொள்ளப்பட்டுள்ள இன்றைய நிலையில் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் மக்கள் மீதான இன்னுமொரு தாக்குதல் கருவியாக பௌத்த மதம் பாவிக்கப்படுவது விசனத்திற்குரியது.

"நாட்டில் இரத்த ஆறு ஓடினாலும் புத்த சிலையை அகற்றமாட்டோம்" என கொக்கரிக்கின்றனர் பேரினவாதிகள். இதன் அர்த்தம் தமிழனின் இரத்த ஆறு ஓடவைக்கப்படும் என்ற மறைமுக பயமுறுத்தல்தான்.

எனவே, பேரினவாதத்திற்கும் சாமரம் வீச எந்தத் தன்மானத் தமிழனும் முன்வரவே மாட்டான் என்பதை அரசும் படைகளும் புரிந்துகொள்ள படையினரின் வெசாக் நிகழ்வுகளைப் புறக்கணிப்போம். - என்றுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா தருமலிங்கம்

### (தித்தி அக்கா)

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி கனகம்மா தருமலிங்கம் அவர்கள் நேற்று (22.05.2005)ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் நந்தகுமார் (லண்டன்), விஜயலஷ்மி, சுகுமாரன் (கார் சுகுமார்), சந்தானலஷ்மி, ஜெயலக்ஷ்மி(லண்டன்), தனலஷ்மி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நேசமலர் (லண்டன்), திருநாவுக்கரசு (கொழும்புத்துறை), சுகந்தினி பஞ்சலிங்கம் (தொல்புரம்), தேவதாசன்(லண்டன்) பாலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2005) திங்கட்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.சுகுமாரன் (மகன்)

தொல்புரம். (45766)(11-12-54)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.